விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 332 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 29 வெள்ளிக்கிழமை (15.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## தபால் மூல வாக்களிப்பில் ஜனாதிபதி அநுரவின்
# தேசிய மக்கள் சக்தி
# அபார வெற்றி



(கொழும்பு) பாராளுமன்றத் தேர்தலில் கிடைக்கப் பெற்ற தபால் மூல வாக்களிப்பு முடிவுகளின்படி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி அபார வெற்றி பெற்றுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## தம்புள்ளையில் கோர விபத்து
### 3 பேர் பலி
### 39 பேர் படுகாயம்

(அநுராதபுரம்)

தம்புள்ளை - மஹியங்கனை வீதியில் மாத்தளை, எலவனகந்த பிரதேசத்தில் பேருந்து ஒன்று வேன் ஒன்றுடன் 02

## அமைதியான தேர்தல்
### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

இலங்கையின் பத்தாவது பாராளுமன்றத்துக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக நடைபெற்ற தேர்தல் 15

## வன்முறைச் சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை
### பிரதிப் பொலிஸ்மா அதிபர்



(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலில் வன்முறைச் சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை என பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 15

## யாழ்.தேர்தல் மாவட்டத்தில் 60.85 வீத வாக்குகள் பதிவு
### தெரிவத்தாட்சி அலுவலர் பிரதீபன்



(யாழ்ப்பாணம்)

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் 60.85 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நடைபெற்று முடிந்துள்ள பாராளுமன்றத் தேர்தலை தொடர்ந்து. யாழ்ப்பாணத்தில் வாக்கெண்ணும் மத்திய நிலையமான 15

### நெடுந்தீவிலிருந்து
## ஹெலிகொப்டர் மூலம்
### வாக்குப்பெட்டி எடுத்து வரப்பட்டது



(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் வாக்குப்பெட்டிகள் யாழ். மத்திய கல்லூரிக்கு எடுத்து வரப்பட்டது. 15

### வன்னித் தேர்தல் மாவட்டம்
## 65.5 சதவீத வாக்குப் பதிவு

(வவுனியா)

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 65.5 சதவீத வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக வன்னி மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் பி.ஏ. சரத் சந்திர தெரிவித்தார்.

நேற்று மாலை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பு நடவடிக்கைகள் நேற்றுக் காலை 7 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4 மணி வரை இடம் 15

## விருப்பு வாக்கை புகைப்படம் எடுத்தவர் கைது

(கொழும்பு)

வாக்களிப்பு நிலையத்தில் தனது விருப்பத்தை உறுதிப்படுத்திய பின்னர் அதனைபுகைப்படம்எடுத்த ஒருவர் ஆலங்குடா முஸ்லிம் கல்லூரியின் மண்டபம் இலக்கம் 1 வளாகத்தில் 15

## வாக்களிப்பு நிலையத்தில்
### கடமையில் இருந்த இருவர் மரணம்

(கொழும்பு)

வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றிய இரண்டு உத்தியோகத்தர்கள் திடீர்சுகவீனம் காரணமாக 02

### தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த
### கோப்பாய் பொலிஸார்
## திடீரென மரணம்



(யாழ்ப்பாணம்)

தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த கோப்பாய் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மதியம் கோப்பாய் தேர்தல் தொகுதிக்கு உட்பட்ட 15

### நாடு முழுவதும் தேர்தலில்
## 60 முதல் 65 சதவீத வாக்குகள் பதிவு

(கொழும்பு)

2024 பொதுத் தேர்தலில் அண்ணளவாக 60 முதல் 65 சதவீத வாக்குகள் பதிவானதாகத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பாரிய அளவிலான எந்த வித முறைகேடும் இதுவரை பதிவாகவில்லை என அவர்கள் தெரிவித் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஒரே ஒரு கட்சியைத் தவிர

# ஏனைய கட்சிகளின் ஆதரவாளர்கள் வாக்களிப்பில் ஆர்வம் செலுத்தவில்லை

## மகிந்த தேசப்பிரிய



பொதுத் தேர்தல் வாக்களிப்பில் ஒரேயொரு கட்சியைத் தவிர ஏனைய கட்சிகளின் ஆதரவாளர்கள் ஆர்வம் செலுத்தவில்லை என்பது எமது நடமாடும் கண்காணிப்பின்போது அவதானிக்கப்பட்டது. ஆனால், இது மிகவும் துரதிர்ஷ்டவசமானதாகும் என்று வீவ் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

ராஜகிரியவில் உள்ள வீவ் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் தலைமையகத்தில் நேற்று வியாழக்கிழமை (14) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடுகையில் இம்முறை தேர்தலில் மக்கள் ஆர்வம் காண்பித்துள்ள வீதம் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. எம்மால் முன்னெடுக்கப்பட்ட நடமாடும் கண்காணிப்பின்போது ஒரேயொரு கட்சியின் ஆதரவாளர்கள் மாத்திரமே ஆர்வத்துடன் வாக்களிப்பதை அவதானிக்க முடிந்தது.

ஏனைய கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் அதனை அவதானிக்க முடியவில்லை. எவ்வாறிருப்பினும் இது துரதிர்ஷ்டவசமான விடயமாகும். சிலரிடம் நாம் இது குறித்து வினவியபோது, எவருக்கும் இதில் ஆர்வமில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இதனால் குறித்த கட்சிகளும் கவலையடைந்துள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டமீறல்கள் இடம்பெற்றுள்ள போதிலும், பாரியளவிலான வன்முறைகள் எவையும் பதிவாகவில்லை. ஆனால் சில பிரதேசங்களில் கட்சி அலுவலகங்கள் நீக்கப்படாமலிருப்பதையும் அவதானிக்க முடிந்தது. எவ்வாறிருப்பினும் கடந்த தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் அமைதியானதும் சுதந்திரமானதுமான முறையில் இம்முறை தேர்தல் இடம்பெற்றுள்ளது.

225 பேரும் வேண்டாம் என்ற கோஷத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. கடந்த முறையும் நான் அதனை எதிர்த்திருந்தேன். ஆனால் எமக்கு தவறானவர் எனத் தோன்றுபவர்களை மீண்டும் தெரிவு செய்யாமல் இருப்பதற்கான அதிகாரம் எமக்கிருக்கிறது. எனவே வாக்களிப்பின் போது வாக்காளர்கள் அது தொடர்பில் சிந்திக்க வேண்டும் என்றார். (ம-7)

# கல்முனையில் அரசியல் குழுக்கள் இடையே மோதல்

(அம்பாறை)

திகாமடுல்ல மாவட்டத்தின் கல்முனை பிரதேசத்தின் அல் அஸ்கர் மகா வித்தியாலயத்திற்கு அருகில் மூன்று அரசியல் குழுக்களுக்கிடையில் மோதல் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் மற்றும் சுயேட்சைக் குழு உறுப்பினர்களுக்கிடையில் இந்த மோதல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

ஏற்கனவே, கல்முனையை மோதல்கள் நிறைந்த பிரதேசமாக தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்பான கபே அறிவித்ததை அடுத்து அங்கு பொலிஸ் பாதுகாப்பையும் பலப்படுத்தியிருந்தது. (ம-7)

## தேசிய மக்கள்...

கிடைக்கப்பெற்ற தபால் மூல வாக்களிப்பு முடிவுகளின் படி வன்னி, இரத்தினபுரி, காலி, களுத்துறை, அம்பாந்தோட்டை, மொனராகலை, கொழும்பு, பதுளை, திருகோணமலை, நுவரெலியா, மாத்தளை, மாத்தறை, பொலன்நறுவை ஆகிய மாவட்டங்களில் தேசிய மக்கள் சக்தி முன்னலையில் உள்ளது. யாழ். மாவட்டம் யாழ் தேர்தல் தொகுதியிலும் ஐக்கிய மக்கள் சக்தி முன்னிலையில் உள்ளது. (ம-7)

## வாக்களிப்பு...

உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (14) விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய போது பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ இதனைத் தெரிவித்தார்.

கெஸ்பேவ வாக்களிப்பு நிலைய கட்டளைத் தளபதியாக கடமையாற்றிய ஒருவர் திடீர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். 48 வயதான அவர் பயாகல பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்.

மேலும், கொபேகனே பிரதேசத்தில் 57 வயதுடைய வாக்களிப்பு நிலைய ஊழியர் ஒருவர் திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ம-7)

(மற்றொரு செய்தி உள்ளே)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 - 10 - 1982 | 12 - 11 - 2024 |



## கந்தசாமி ஜெனகசெல்வன்

### (திருச்செல்வி அச்சக உரிமையாளர்)

பட்டினசபை வீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி ஜெனகசெல்வன் அவர்கள் 12.11.2024 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் கந்தசாமி - காலஞ்சென்ற இராசகுமாரி தம்பதியரின் இளைய மகனும் இராசரத்தினம் (தவம்) - பவளராணி தம்பதியரின் அன்பு மருமகனும் சுகிர்தினி (சுகி) அவர்களின் அன்புக் கணவரும் ஆரங்கா, ஆரணன், ஆராதனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தாமரைச்செல்வி (நோர்வே), திருப்பரஞ்செல்வன் (பரா- லண்டன்), மிதிலச்செல்வன் (மிதிலன் - லண்டன்), சரசசெல்வி (சரசா - திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரவீந்திரன் (நோர்வே), கல்ப்பனா (லண்டன்), கீர்த்தி (லண்டன்), ராஜிதன் (திருகோணமலை), சுகந்தினி (சுவிஸ்), ஜெசிந்தினி, சுகிர்தன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஜரிஸ், செலீனா, நிலானா(நோர்வே), டிவினியா, தேயஸ்வினி, தரணிதன் (திருகோணமலை), சாருஜன், லதுஜன், அமிர்தா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மிதுஷ், லினேஷ் (லண்டன்), அரண், அர்மினா, அபிரா (லண்டன்), ராகுல், கோகுல், அகுல் (சுவிஸ்), சுபர்ணன், அபிவர்ணன், வர்ஷானா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் பட்டினசபை வீதி மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பட்டின சபை வீதி,
மானிப்பாய்.

தகவல் : குடும்பத்தினர்
071 8023 831

(C-1584)

## மகளிருக்கான பயிற்சிகள்

கிழமை நாள் மற்றும் சனி ஞாயிறு
புதிய பிரிவுகளுக்கு அனுமதிகள் வழங்கப்படுகின்றன!!!

* ICING (8 வகை) * CAKES (7 வகை) * COOKERY
* HAIR DRESSING * BEAUTICIAN COURSES

கட்டணங்கள் தவணை முறையில் செலுத்தலாம்

தையல் பயிற்சிகள்

இடம் :- யாழ் கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி,
(யாழ் போதனா வைத்தியசாலை பின் வீதி,)

தொடர்புகளுக்கு :-
077 711 0383
074 217 0383
(Whatsapp No)

(C-1585)

## விற்பனைக்கு

1. யாழ். நகரின் வர்த்தக மையப் பகுதியான வைத்தியசாலை வீதியில் குகன் ஸ்ரோர்ஸ்க்கு அருகில் 16 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட கடையும் காணியும்
2. யாழ். பலாலி வீதியில் 4 பரப்பில் அமைந்த வீடும், யாழ். K.K.S வீதியில் 20 அடி அகலமும் 160 அடி நீளமும் கொண்ட 3 மாடிக் கடையும் விற்பனைக்குண்டு.

(C-1586)

077 723 2535

## தம்பு...

ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 3 பேர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் 39 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (ம-7)

## மில் வேலைக்கு ஆட்கள் தேவை

சம்பளம் 2500/=
இற்கு மேல் (ஆண், பெண்
இருபாலாரும்)

பழக விரும்புவோரும் அழைக்கலாம்.

077 936 1356

(540)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி அம்மாச்சி
உணவகத்திற்கு அருகில்
பலாலி வீதியில் இருந்து
இரண்டாவது காணி 2 பரப்பு
விற்பனைக்கு.

(தரகர் தவிர்க்கவும்)

077 082 1010




( உரிமையாளர் )


(2427)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் - 2024














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சல் மூல தேர்தல் முடிவுகள்

இச் செய்தி அச்சுக்கு போகும் வரை கிடைக்கப்பெற்றவை

## யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | : 5,681 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | : 4,808 |
| சுயேட்சைக் குழு - 17 | : 3,548 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | : 2,623 |

## வன்னி

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | : 4,371 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | : 2,349 |
| ஐக்கிய மக்கள் சக்தி | : 1,825 |
| ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி | : 1,399 |

## களுத்துறை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | : 29,076 |
| ஐக்கிய மக்கள் சக்தி | : 3,340 |
| புதிய ஜனநாயக முன்னணி | : 1,913 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | : 1,160 |

## திருகோணமலை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | : 9,705 |
| ஐக்கிய மக்கள் சக்தி | : 2,853 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | : 1,749 |
| புதிய ஜனநாயக முன்னணி | : 382 |

## மொனராகலை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | : 19,686 |
| ஐக்கிய மக்கள் சக்தி | : 3,297 |
| புதிய ஜனநாயக முன்னணி | : 833 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | : 650 |

## கொழும்பு

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | : 28,475 |
| ஐக்கிய மக்கள் சக்தி | : 2,985 |
| புதிய ஜனநாயக முன்னணி | : 1,814 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | : 934 |

## பதுளை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | : 33,780 |
| ஐக்கிய மக்கள் சக்தி | : 3,866 |
| புதிய ஜனநாயக முன்னணி | : 2,227 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | : 675 |

## மாத்தறை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | : 24,954 |
| ஐக்கிய மக்கள் சக்தி | : 2,692 |
| புதிய ஜனநாயக முன்னணி | : 1,823 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | : 548 |

## நுவரெலியா

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | : 13,937 |
| ஐக்கிய மக்கள் சக்தி | : 2,477 |
| புதிய ஜனநாயக முன்னணி | : 2,227 |
| ஐக்கிய தேசியக் கட்சி | : 1,660 |

## மாத்தளை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | : 17,123 |
| ஐக்கிய மக்கள் சக்தி | : 2,201 |
| புதிய ஜனநாயக முன்னணி | : 954 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | : 637 |

## அம்பாந்தோட்டை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | : 17,326 |
| ஐக்கிய மக்கள் சக்தி | : 1,623 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | : 1,293 |
| புதிய ஜனநாயக முன்னணி | : 774 |

## பொலநறுவை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | : 16,052 |
| ஐக்கிய மக்கள் சக்தி | : 2,184 |
| புதிய ஜனநாயக முன்னணி | : 425 |
| சர்வஜன அதிகாரம் | : 386 |

## இரத்தினபுரி

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | : 24,776 |
| ஐக்கிய மக்கள் சக்தி | : 2,969 |
| புதிய ஜனநாயக முன்னணி | : 1,528 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | : 1,031 |

## கண்டி

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | : 44,819 |
| ஐக்கிய மக்கள் சக்தி | : 4,698 |
| புதிய ஜனநாயக முன்னணி | : 2,770 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | : 928 |

## புத்தளம்

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | : 11,404 |
| ஐக்கிய மக்கள் சக்தி | : 1,661 |
| புதிய ஜனநாயக முன்னணி | : 672 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | : 454 |

# கிடைக்கப்பெற்ற தொகுதி வாரி முடிவுகள்

## யாழ் மாவட்டம் யாழ் தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சக்தி | : 9,066 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | : 2,582 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | : 1,612 |
| ஈழ மக்கள் ஜனநாயக கட்சி | : 1,361 |
| ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி | : 1,124 |

## நல்லூர் தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | : 8,831 |
| தமிழ் மக்கள் கூட்டணி | : 3,527 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | : 3,228 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | : 2,396 |

## மாத்தறை மாவட்டம் மாத்தறை தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | : 47,083 |
| ஐக்கிய மக்கள் சக்தி | : 8,339 |
| புதிய ஜனநாயக முன்னணி | : 4,305 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | : 1,099 |

## காலி - அம்பலாங்கொடை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | : 36,196 |
| ஐக்கிய மக்கள் சக்தி | : 7,536 |
| புதிய ஜனநாயக முன்னணி | : 2,047 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | : 3,075 |

## காலி - பலப்பிட்டிய

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | : 21,681 |
| ஐக்கிய மக்கள் சக்தி | : 5,588 |
| சர்வஜன அதிகாரம் | : 1,855 |
| புதிய ஜனநாயக முன்னணி | : 1,471 |

## காலி - ரத்கம

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | : 33,113 |
| ஐக்கிய மக்கள் சக்தி | : 7,083 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | : 3,408 |
| புதிய ஜனநாயக முன்னணி | : 2,751 |

## காலி - ஹபராதுவ

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | : 38,080 |
| ஐக்கிய மக்கள் சக்தி | : 7,964 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | : 3,217 |
| புதிய ஜனநாயக முன்னணி | : 2,116 |

## காலி - அக்மீமன

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | : 48,629 |
| ஐக்கிய மக்கள் சக்தி | : 8,496 |
| புதிய ஜனநாயக முன்னணி | : 5,008 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | : 4,153 |

## அம்பாந்தோட்டை - தங்கல்ல

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | : 61,215 |
| ஐக்கிய மக்கள் சக்தி | : 9,975 |
| புதிய ஜனநாயக முன்னணி | : 6,750 |
| ஐக்கிய தேசிய கூட்டணி | : 5,545 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளவிக் கொட்டுக்கு இலக்காகி

## 17 முன்பள்ளி சிறுவர்கள் வைத்தியசாலையில்

(அநுராதபுரம்)

அநுராதபுரம், தலாவ, ஹெலம்பவெவ பிரதேசத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி 17 முன்பள்ளிச் சிறுவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

3 முதல் 4 வயதுக்குட்பட்ட முன்பள்ளி சிறுவர்களே குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

முன்பள்ளி பாடசாலையின் தோட்டத்தில் உள்ள மாமரத்திலிருந்த குளவிக் கூடு ஒன்று கலைந்ததால் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குளவி கொட்டுக்கு இலக்காகிய சிறுவர்கள் தலாவ ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களில் மூவர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (நி-8)

# ஐ.எம்.எப் இன் பயணம் ஒத்திவைப்பு

## நாளை வருகை தரவுள்ளதாக அறிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தல் தினத்தன்று இலங்கைக்கு அதிகாரப்பூர்வ பயணம் மேற்கொள்ளவிருந்த சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்ட குழு, தமது பயணத்தை ஒத்திவைத்துள்ளது.

இலங்கையில் பொதுத் தேர்தல் இடம்பெறுவதால் நாளை 16ஆம் திகதியே தமது குழுவின் பயணம் இடம்பெறும் என சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

இதேவேளை முன்னதாக இலங்கையின் நீட்டிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் மூன்றாவது மீளாய்வைப் பற்றிக் கலந்துரையாடல்களை நடத்த சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று நேற்று 14ஆம் திகதி இலங்கைக்கு வருவதாக அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)


# யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) திருநெல்வேலி கிழக்கு கோப்பாய். பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் நிரந்தர பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தை அலுவலக வேலைநாட்களில் தலைமைக் காரியாலயத்தில் **ரூபா20/-** ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் "தலைவர். யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். திருநெல்வேலி கிழக்கு. கோப்பாய்" என்ற முகவரிக்கு **30.11.2024** ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

1) பதவி : உற்பத்தி முகாமையாளர் (நிரந்தரம்)
சம்பள குறி இல : **107/06**
சம்பளத்திட்டம் : **02/2022** இன் படி 22045-290x10-340x10-28345
வெற்றிட எண்ணிக்கை : 01
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:
(அ) கூட்டுறவு ஊழியர் 07 ஆவது சம்பளத் திட்டப்பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/

கூட்டுறவு ஊழியர் 08 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் சம்பந்தப்பட்ட துறையில் பட்டம்/ சம்பந்தப்பட்ட துறைசார்ந்த டிப்ளோமா/ சம்பந்தப்பட்ட துறை சார்ந்த பயிற்சி நெறிச் சான்றிதழ்.

அல்லது

(இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் உற்பத்தி/ சந்தைப்படுத்தல்/ பொருள் விநியோகமும் பங்கீடும் / பொருள் இறக்குமதியும் ஏற்றுமதியும் ஆகிய பிரிவுகளில் ஒன்றில் அதற்கு மேற்பட்ட பிரிவுகளில் முகாமை நிலைப் பதவியொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக்குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்/

க.பொ.த.உயர் தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் உற்பத்தி/ சந்தைப்படுத்தல்/ பொருள் விநியோகமும் பங்கீடும்/ பொருள் இறக்குமதியும் ஏற்றுமதியும் ஆகிய பிரிவுகளில் ஒன்றில்/ அதற்கு மேற்பட்ட பிரிவுகளில் முகாமை நிலைப் பதவியொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் **ஆகக் குறைந்தது 07 ஆண்டு கால அனுபவம்.**

2) பதவி : உள்ளகக்கணக்காய்வாளர் (நிரந்தரம்)
சம்பள குறி இல : **105/09**
சம்பளத்திட்டம் : **02/2022** இன் படி 20200-250x10-260x10-25300
வெற்றிட எண்ணிக்கை : 01
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:
(அ) கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத் திட்டப்பதவியில் முகாமை நிலைப்பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/
கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை/ மேற்பார்வை நிலைப்பதவியில்/ நிறைவேற்றாளர் நிலைப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

(ஆ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா/ இதற்குச் சமனான தகைமை/ மாகாண கூட்டுறவுப்பயிற்சி நிறுவனத்தினால் / தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

அல்லது

(இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வுக் களங்களில் மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்./

க.பொ.த.உயர் தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வுக் களங்களில் மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

3) பதவி : கணக்குப்பதிவாளர் (நிரந்தரம்)
சம்பள குறி இல : **215/11**
சம்பளஅளவுத்திட்டம் : **02/2022** இன் படி 19280-190x10-210x10-23280
வெற்றிட எண்ணிக்கை : 01
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:
அ) கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் கணக்குப் பதிவாளர்/ வெளிக்கள உத்தியோகத்தர்/ எழுதுநர்/ காசாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./

கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் கணக்குப்பதிவாளர்/ வெளிக்கள உத்தியோகத்தர்/ எழுதுநர்/ காசாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) இலங்கைத்தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமாவுடன்/ இதற்கு சமனான தகைமை/ மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால் / தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கியல் துறைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்/

க.பொ.த. உயர் தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கியல் துறைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

4) பதவி : விற்பனைஉதவியாளர் (நிரந்தரம்)
சம்பள குறி இல : **308/15**
சம்பளத்திட்டம் : **02/2022** இன் படி 17435-145x10-160x10-20485
வெற்றிட எண்ணிக்கை : 02
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:
(அ) கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் விற்பனை உதவியாளர்/ எரிபொருள் நிரப்புநர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் விற்பனை உதவியாளர் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

(ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ்மொழி. கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

5) பதவி : தொழிலாளர் (பால்பொருள்உற்பத்திப்பகுதி) (நிரந்தரம்)
சம்பள குறி இல : **318/16**
சம்பளத்திட்டம் : **02/2022** இன் படி 16975 – 135x 10 – 150 x 10 – 19825
வெற்றிட எண்ணிக்கை : 02
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:
பத்தாம் வகுப்பு வரை கல்வி கற்றிருப்பதுடன் பால் உற்பத்திகள் சம்பந்தமான துறையில் ஒரு வருட கால அனுபவமும் நல்ல தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

பொதுவான நிபந்தனைகள்:
1. வயது 30.11.2024 ஆம் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
2. யாழ்.மாவட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக வசித்தமையை உறுதிப்படுத்துவதற்கு சான்றிதழ்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கல்வித்தகைமைகள். அனுபவம். வயது. வதிவிடத்தை உறுதிப்படுத்தல். நற்சான்றிதழ். தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
4. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றுநிரூபத்திற்கு அமைவாக அங்கீகரிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.
5. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கு அமைவாக நிர்வாகத்தினால் விதிக்கப்படும் ரொக்கப் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
6. ஏனைய சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் அச்சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
7. சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.
8. விண்ணப்பத்தில் காட்டப்படும் தகவல்களும். இணைப்புகளும் உண்மையானதும். செம்மையானதுமென உறுதிப்படுத்துவதோடு ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் இதில் ஏதேனுமொன்று பிழையானதெனவோ அல்லது பொய்யானதெனவோ காணப்படுமிடத்து நஷ்டஈடு பெறாது உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள் என்பதை தாங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

15.11.2024

**தலைவர்**

(சி-1583)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலட்டை பிடித்த ஐவர் கைது

(மன்னார்)

இலங்கை கடற்படையினரால் நேற்று முன்தினம் இரவு மன்னார் வங்காலை மற்றும் சிலாவத்துறை கடற்பகுதியில் நடத்தப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையின் போது கடலட்டைகளைப் பிடிக்கும் நடவடிக்கையில் சட்டவிரோதமான முறையில் சுழியோடிய ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்ட 1055 கடலட்டைகள் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர்களையும் பிடிக்கப்பட்ட கடலட்டைகளையும் மேலதிக நடவடிக்கைகளுக்காக மன்னார் உதவி கடற்றொழில் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் சிலாவத்துறை கடற்றொழில் பரிசோதகரிடம் இலங்கை கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர். (6-8)

# O⁺ குருதி வகைகளுக்கு யாழ்.போதனாவில் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் O⁺ குருதி வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுதாக இரத்த வங்கி பிரிவு தெரிவித்துள்ளது.**

விபத்துக்கள், சத்திரசிகிச்சைகள், குருதிச் சோகை நோயாளர்கள் மற்றும் குருதி தேவைப்பாடு நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வைத்தியசாலையில் அதிகரித்து செல்வதால் இரத்த வங்கியில் விநியோகிக்கப் படுகின்ற O⁺ குருதி வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்தனர்.

இந் நிலையில் குருதி வழங்கத் தகுதியுடையவர்கள் யாழ்.போதனாவின் இரத்த வங்கிக்கு நேரில் சென்று இரத்ததானம் வழங்கி உதவுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இரத்ததான முகாம்களை ஒழுங்கமைப்பு செய்ய விரும்புவோரும் 077 210 5375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும் என இரத்த வங்கி பிரிவு தெரிவித்துள்ளது. (6-8-33)




## தெல்லிப்பழைக் கோட்ட அதிபர்கள் சங்க பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழைக் கோட்ட அதிபர்கள் சங்கத்தின் சேவை நலன் பாராட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யா/மகாஜனக் கல்லூரி பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பழைக் கோட்ட அதிபர்கள் சங்கத் தலைவர் த.தயானந்தன் தலைமையில் இடம் பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. லாவண்யா சுகந்தன், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே.அரசகேசரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-8)

## வாக்களிப்பு நிலையங்களை பார்வையிட்ட தெரிவத்தாட்சி அலுவலர்

(யாழ்ப்பாணம்)

வாக்களிப்பு நிலையங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டார் யாழ்.மாவட்ட பதில் அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான ம.பிரதீபன்.

இலங்கையின் 10 ஆவது பொதுத் தேர்தல் நேற்று இடம்பெற்றது. இந்நிலையில் யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் யாழில் சில வாக்களிப்பு நிலையங்களுக்கு நேரில் சென்று அவதானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)




## வீதி விபத்தினை தடுக்க சமிக்ஞைகள் வேண்டும்

### பொதுமக்கள் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சந்தியில் இடம் பெறும் வீதி விபத்துகளை தடுப்பதற்கு அப் பகுதியில் வீதி சமிக்ஞை விளக்குகளை பொருத்துமாறு பொது மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். குறித்த சந்தியூடாக பயணிக்கும் பயணிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக இவ் வீதியில் நான்கு சந்திகள் ஊடாக வாகனங்கள் பயணிக்கும் வேளையில் வாகன நெரிசல் நிலை ஏற்படுவதுடன் விபத்துச் சம்பவங்களும் இடம் பெறுகின்றன.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் உரிய நடவடிக்கை எடுத்து குறித்த பகுதியில் வீதி சமிக்ஞை விளக்குகளை பொருத்தித்தருமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (6-8-60)

## டிப்ளோமா கற்கைநெறி விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் நடத்தப்படும் மனைப் பொருளியல் டிப்ளோமா தரச் சான்றிதழ் கற்கை நெறிக்கான- 2025 விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சி நெறியை தொடர விரும்பும் யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் கா.பொ.த சாதாரண தரம் படித்த 18 - 35 வயதினை உடையோர் யாழ்ப்பாண பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு எதிர்வரும் 10.12. 2024 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற் கொள்ளுமாறு யாழ்ப்பாண பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் அறிவித்துள்ளார். (6-8)

## நீரிழிவு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நடை பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையம் உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு நடத்தும் "தடைகளை உடைத்தல், இடைவெளிகளைக் குறைத்தல்" எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு நீரிழிவு நடைபயணம் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை இடம் பெறவுள்ளது.

காலை 6.30 மணிக்கு யாழ். போதனா வைத்திய சாலையின் ஜே. ஐ.சி. ஏ கட்டட முன்றலில் இருந்து ஆரம்ப மாகவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலுவைத் தொகை செலுத்தாவிடின் உரிமங்கள் ரத்தாகும்

## மது உற்பத்தி நிறுவனங்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் நிலுவைத்தொகை செலுத்தப்படாவிட்டால் டபிள்யூ. எம். மெண்டிஸ் நிறுவனம் உட்பட ஐந்து மதுபான உற்பத்தி நிறுவனங்களின் உரிமங்களை இடைநிறுத்த மதுவரித் திணைக்களம் தீர்மானித்துள்ளதாக சட்டமா அதிபர் நேற்று முன்தினம் உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

சமூக ஆர்வலர் சஞ்சய் மஹவத்த உள்ளிட்ட குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு அழைக்கப்பட்ட போதே மதுவரி ஆணையாளர் நாயகம் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

இந்த ஐந்து நிறுவனங்களும் செலுத்தாத வரிப் பணத்தின் பெறுமதி ஆறு பில்லியன் ரூபாவை அண்மித்துள்ளதாக வழக்கு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த மனுவில், உரிய வரிப் பணத்தை வசூலிக்குமாறு மதுவரி ஆணையர் நாயகத்திற்கு உத்தரவு பிறப்பிக்கவும் வரி செலுத்துவதை புறக்கணிக்கும் நிறுவனங்களின் உரிமத்தை ரத்து செய்ய உத்தரவு பிறப்பிக்கவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஙி-8)

லங்கா மஹால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(633)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
Western Union WU MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

# சித்தராயர் வழிவந்த சித்த வைத்தியர் குணரத்தினம் முத்துப்பிள்ளை தம்பதிகள் பெற்றெடுத்த முத்துக்கள் அத்தனையும் சித்த வைத்தியரே!




டாக்டர் திருமதி. தெய்வானைப்பிள்ளை பூலோகசுந்தரம்



டாக்டர் திருமதி. கந்தசாமி சிவக்கொழுந்து




டாக்டர் குணரத்தினம் சங்கரப்பிள்ளை (பிரபல சித்த ஆயுள் வேத வைத்தியர்)




டாக்டர் குணரத்தினம் செல்வத்துரை (ஓய்வு பெற்ற அதிபர், பிரபல வைத்தியர்)



டாக்டர் திருமதி செல்வத்துரை பொன்னம்மா (வைத்திய பூபதி, பாரம்பரிய வைத்தியர்)



டாக்டர் குணரத்தினம் திருச்செல்வம் (வைத்தியர்)



டாக்டர் பூலோசுந்தரம் கயிலநாதன் (D.A.M.S (CEY)) "சகலராபிஷேக வைத்திய சூரி" முன்னாள் முகாமையாளர், பரராய் ஈஸ்வரவிநாயகர், சுழிபுரம்.



டாக்டர் செல்வத்துரை வரதரத்தினம்



டாக்டர் செல்லத்துரை இராசரத்தினம்



டாக்டர் சி.சுப்பையா "முறிவு நெறிவு நோ வைத்தியரும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தரும், (எதிர்பாராத விபத்தில் இறந்தார்)

**மயிலணி சைவ மகாவித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திக்குழுச் செயலாளர் ஆசிரியர் தினவிழாவில் அதிபர், ஆசிரியர்களை வாழ்த்தியும், பாடசாலைப் பிள்ளைகளின் பெற்றோர்க்கு நகரப்புற பாடசாலைக்கு போகாமல் கிராமப்புற பாடசாலையில் கல்வியைத் தொடர வைக்கும்படி அன்பான வேண்டுகோளை முன்வைத்தார்.**

மதிப்புக்குரிய அதிபர் அவர்களே. பிரதி அதிபர் அவர்களே மற்றும் இன்றைய விழாவை சிறப்பிக்க வந்த பிரதமவிருந்தினர் இலங்கை வங்கி முகாமையாளர் அவர்களே. ஆசியுரை வழங்க வந்த சிவஸ்ரீ உமாசுதன் ஐயா அவர்களே. சிறப்பு விருந்தினர் அவர்களே. மாணவச் செல்வங்களே அனைவருக்கும் காலை வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது பாடசாலைச் செயலாளர் என்ற வகையில் ஒரு சில கருத்தைக் கூற விரும்புகிறேன்.

கல்வி தொடர்பாக ஆதிகாலத்தில் மகாபாரதம். இராமாயணம் போன்ற இதிகாச நூல்களில் குரு சிசியன் முறையில் கல்வி புகுத்தப்பட்டது. அரச வம்சமாகச் சரி சாதாரண ஆட்களாக சரி குருவிடம் தத்தமது பிள்ளைகளை கல்விக்காக குருமாரிடம் பாரம் கொடுத்து விடுவார்கள். உதாரணமாக அரச வம்சத்தைச் சேர்ந்த கிருஸ்ணரும் குசேலரும் ஒன்றாக கல்வி கற்றுள்ளார்கள். இதே போன்ற பாரதக் கதைகளில் பாண்டவர்கள் தத்தமது குருவுடனே கல்வியை கற்றுவந்தார்கள். இவ்விதம் கல்வி கற்று வந்த எமது சமுதாயம் பின்னர் திண்ணைக் கல்வியில் கற்று உள்ளார்கள். அதன் பின் தற்போது பாடசாலை மூலம் பிள்ளைகள் கல்வியைக் கற்று வருகிறார்கள்.

ஒரு சமுதாயத்தை உயர்ந்த நிலைக்கு கொண்டுவருவது ஆசிரியர்களின் பொறுப்பாகும். அவ்விதம் எமது மயிலணி சைவ மகா வித்தியாலயம் அதிபர் பார்த்தீபன் அவர்களின் வழிகாட்டலில் இங்கு கல்வி புகட்டும் ஆசிரியர்களின் விடா முயற்சியாக எமது பிள்ளைகளுக்கும் கல்வியை மட்டுமில்லாமல் ஒழுக்கத்தையும் விளையாட்டுத் துறையிலும் மிகக் கன்னியமான முறையில் தமது கடமைகளை எவ்வித குறையும் இன்றி நிறைவுடன் செய்து வருகின்றனர்.

அதோடு மதிய நேரம் கொடுக்கப்படும் உணவு மிக தரமானதாக இருக்கிறது. எனது மகனும் கல்வி கற்று வருகிறார். அவர் பாடசாலை முடிந்ததும் வீட்டிற்கு வந்து உணவு அருந்துவதில்லை பாடசாலை உணவு மிக தரமானதென அக மகிழ்கிறார். பிரத்தியேக வகுப்புக்குப் போக மறுக்கிறார். எனவே இப்பாடசாலை மகா தங்கிய அதிபர், ஆசிரியர்களின், தங்களின் கடமைகளைச் சீரும் சிறப்புமாகச் செய்து வருவதை இட்டு இப்பாடசாலைச் செயலாளர் என்ற முறையில் அக மகிழ்ச்சியடைகிறேன். அவர்களின் சீரான பணி தொடர்ந்து சீராக நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். மற்றும் 11ஆம் வகுப்பு மாணவ, மாணவிகள் இன்றைய விழாவை மிக சிறப்பாக செய்வதையிட்டு ஆசிரியர்களின் திறமைகளை மாணவர்கள் உணர்ந்துள்ளார்கள். போன வருடம் மத சிறிலங்கா போட்டியில் எனது மகன் உட்பட தேசிய ரீதியில் முதலாம் இடத்தை கொழும்பு நகரில் அலரி மாளிகையில் மாண்புமிகு பிரதமர் தினேஸ் குணவர்த்தன அவர்களிடம் பாடசாலைக்கு 30 இலட்சம் ரூபாய் காசோலையும் வழங்கி கிராமப்புற பாடசாலைக்கும் ஊருக்கும் பெருமையைத் தேடித்தந்துள்ளார்கள். இவைகளுக்கு காரணம் ஆசிரியரின் முயற்சி ஆகும்.

சகல பெற்றோர்களுக்கும் நாம் வைத்தியர் என்ற ரீதியில் ஒரு வேண்டுகோளை விடுக்கிறேன். எமது பிள்ளைகள் நகர்புற பாடசாலைக்குப் போகாமல் எனது கிராமப்புற பாடசாலையில் கல்வி கற்க ஆவண செய்யவும் பிள்ளைகள் அயல் கிராம பாடசாலையில் கல்வி கற்கும் பிள்ளைகள் நல்ல ஓய்வு எடுப்பார்கள். பலவிதமான காய்ச்சல்கள் எங்களை அறியாமல் வருகின்றது. ஆகவே வீட்டுக்கு அருகாமையில் உள்ள பாடசாலையில் கல்வியைத் தொடங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

### வைத்தியக் குறிப்புக்கள்.

**எமக்கு உற்ற துணை யார்?**

எமக்கு உற்ற துணையாக இருப்பது யார் என்றவுடன் மயக்கம் ஏற்படும். ஒருவர் சொல்லுவார் தந்தை. தாய். மனைவி. உறவினர்கள், கடவுள் என்ற நீண்ட வரிசையில் ஒருவர் சொல்லிவிடலாம் என்பவர் நினைப்பர். ஆனால் ஆன்மீக சிந்தனையில் எமது உடம்புதான் எமக்கு உற்றதுணையாக நவீன கருத்தாகும். எமது உடல் ஆரோக்கியம் சிறப்பாக வாழ்ந்தால் நாம் நீண்ட காலமாக உயிர் வாழ முடியும். இதனால் எமக்கு உற்றதுணை உடம்பாகும். உடம்பு உற்சாகமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தால் எமது உயிர் நீண்ட காலமாக உடம்பில் தங்கியிருக்கும்.

**வீட்டில் மூலிகைகள் வளர்ப்பதால் ஏற்படும் நன்மைகள்.**

- எமது பாரம்பரிய,பாதுகாக்கப்பட்ட இனிய நறுமணத்துடன் கூடிய காற்றோட்டம் கிடைக்கும் வீட்டுச் சூழல் தெய்வீகத் தன்மை பெறும். விஷ ஜந்துக்கள் வீட்டில் அணுகாது.
- வீட்டுச் சூழலில் அழகாகக் காட்சியளிக்கும் மூலிகைத் தோட்டத்தில் உளாவி தோட்டத்தை ஒழுங்கமைத்தல் நல்ல பொழுது போக்காக அமையும் இதனால் மன அழுத்தங்கள் நீங்கி மகிழ்ச்சியும் ஏற்படும்.
- மூலிகைகளை சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை இனம் காணக்கூடியதாக அமைவதுடன் மூலிகைகளின் வளர்ச்சி பற்றிய கல்வி அறிவுவளர்ச்சி பெறும்.
- தினமும் விதவிதமான. இயற்கையான. சுத்தமான (கிருமி நாசினிகள் அடிக்காத) சமைத்து உண்ணக் கூடிய மூலிகைகளை உணவில் சேர்த்துக் கொள்ளலாம். இதனால் நோய் இன்றி ஆரோக்கியமாக வாழலாம்.
- வீட்டிற்கு வருபவர்களுக்கும் கொடுத்து நல்லுறவை வளர்த்துக் கொள்ளலாம்.
- சாதாரண நோய்கள் ஏற்பட்டால் உடன் வீட்டு மூலிகைகளை பறித்து இலகு மருத்துவம் செய்து குணமாகலாம்.
- இதனால் நோய்கள் உடன் குணமாகின்றது. வீண் அலைச்சல் தவிர்க்கப்படுகின்றது.நேரமும் பணமும் மீதியாகின்றது. (சில நோய்களுக்கு உடன் வைத்தியசாலைக்கு சென்று மருத்துவ ஆலோசனைகளைப் பெறுதல் வேண்டும்) இடவசதிக்கு ஏற்றவாறு மூலிகைகளை வளர்த்து விற்று பணம் சேர்த்துக் கொள்ளலாம்.

**மூலிகைகளின் சிறப்புகள்:-**

- அறிவுக் கனியாகும் வாழைக்கனி மிக இலகுவாகவும் மலிவாகவும் கிடைக்கும். வாழைப்பழும் நம் உடலுக்கு நல்ல போசணையைத் தரும் . அதனால் அறிவு வளர்ச்சிக்கு ஏற்றது.
- **"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்."** அதிக விருப்பமான உணவு என்றாலும் சுகமாக்கும் மருந்து என்றாலும் விரும்பிய செயல் எதுவென்றாலும் அளவுக்கு மிகுதியாகப் போனால் அது அமிர்தமாக இருக்காது. நஞ்சாக மாறிவிடும்.
- **"வல்லாரை உண்டால் வல்லாரைவெல்லலாம்"** வல்லாரை ஞாபகசக்தியை அதிகரிப்பதுடன் உடற்பலத்தையும் அதிகரிக்கும். இதனால் வலிமையுள்ளவனை வெல்லலாம்.
- **"சுக்கைப் போல் மருந்தில்லை சுப்பிரமணியம் போல் தெய்வமில்லை"** கருணை வள்ளலான சுப்பிரமணியக் கடவுள் எம்மைக் காப்பது போல் மருந்துகளில் சுக்கு இல்லாமல் செய்வதுமில்லை. சுக்குத் தேநீர் குடித்தால் நல்லது.
- **"பத்து மிளகிருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்."** பகைவன் வீட்டில் உண்பதனால் ஏதாவது நச்சுத் தன்மையிருந்தாலும் பத்துமிளகு விஷத்தைப் போக்கும். அதனால் எமது உணவிலும் மிளகு சேர்ப்பதனால் அதிலுள்ள நச்சினைப் போக்கும்.
- **"ஆலும் வேலும் பல்லுக்குறுதி"** ஆலமரப்பட்டையும் வேல் என்பது வேம்பு வெள் வேலமரம். அதன்பட்டையும் பற்களுக்கு பாதுகாப்பு.
- **"கறிவேப்பிலையோ - வேப்பிலைகாய்கறிக்கெல்லாம் தாய்ப்பிள்ளை"** காய்கறி எல்லாவற்றையும் சமைக்கும் போது நாம் கறிவேப்பிலை சேர்க்கிறோம்.
- **"பொன்னை எறிந்தாலும் பொடிக் கீரையை எறியாதே"** விலை கூடிய பொன்னை விட கீரை வகையானது மதிப்பு கூடுதலானது. அது உண்பதால் உடலுக்கு அதிக போசணையைத் தரும்.

அன்புள்ளங்களே பாரம்பரிய சித்த வைத்தியர் செல்லத்துரை அவர்களினால் செலவில்லாத இயற்கைமருத்துவக் குறிப்புக்களை அடியேன் தங்களுக்குஅறியத் தருகின்றேன். மற்றும் சகலவிதமான நோய்களைத் தீர்க்க கூடிய மருந்துகள் எம்மிடம் உள்ளது. மேலும் முக்கியமான நாடி பார்ப்பதில் எனக்கு மேலே உள்ளவர்கள் எனக்கு கற்றுத் தந்துள்ளார்கள். நான் சுழிபுரத்தில் வாழ்ந்தது போல் சுன்னாகத்தில் மிகச் சிறப்பாக வைத்திய சேவை செய்து வருகின்றேன். பிள்ளைச் செல்வங்கள் இல்லாதவர்கள் கூட சித்த மருத்துவ சிகிச்சை மூலம் பல பேர் மிகவும் சந்தோசத்துடன் வாழ்ந்துள்ளார்கள்.

அமரர் செல்லத்துரை ஞாபகார்த்த வைத்தியசாலை.
சுன்னாகம் NSB Bank வீதி. உடையர் வளவு
சுன்னாகம்.


செ. கிருபாரத்தினம். ஆயுள் வேத வைத்தியர்.
முன்னாள் இந்தியா ஈழ எதிரியர் மறுவாழ்வுக் கழகம்.
நல்லாயன் ஆராய்ச்சி மையம். பொறுப்பாளர்.

(2424)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# பிரதமர் மோடிக்கு டொமினிகாவின் உயரிய விருது



(ரோஸியு)

பிரதமர் மோடிக்கு டொமினிகா நாட்டின் மிக உயரிய விருது வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா சமயத்தில் கரிபீயன் நட்பு நாடான டொமினிகாவுக்கு கொரோனா மருந்துகளை வழங்கி உதவி செய்தார். அதே போல, கல்வி மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றிலும் இந்தியா சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ளது. இதனை கௌரவிக்கும் விதமாக, பிரதமர் மோடிக்கு டொமினிகாவின் மிக உயரிய விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் கயானாவின் ஜர்ஜ் டவுனில் நடக்கும் இந்தியா - கரிகாம் மாநாட்டில் பிரதமர் மோடிக்கு இந்த விருது வழங்கப்பட இருக்கிறது.

இது தொடர்பாக டொமினிகாவின் பிரதமர் ஸ்கெரிட் கூறுகையில், "பிரதமர் மோடி டொமினிகாவின் உண்மையான நண்பர். குறிப்பாக, உலகத்திற்கே சுகாதார அச்சுறுத்தல் நிலவிய காலத்தில் அவரது உதவி மகத்தானது.

அதனை கௌரவிக்கும் விதமாக, நாட்டின் உயரிய விருதை வழங்குகிறோம். இதன்மூலம், இரு நாடுகளின் உறவு பலப்படும்" எனத் தெரிவித்தார். (நி-8)

# காசாவில் போர் நிறுத்தத்திற்கு இந்தியா முழு ஆதரவு

## ஜெய்சங்கர் வலியுறுத்து



(டில்லி)

"காசாவில் போர் நிறுத்தத்தையும் பாலஸ்தீன பிரச்சினைக்கு இருதரப்பு தீர்வையும் இந்தியா ஆதரிக்கிறது" என மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

டில்லியில் பாதுகாப்பு, சமூக மற்றும் கலாசார ஒத்துழைப்புக்கான குழுவின் 2 ஆவது கூட்டம் நடைபெற்றது. அப்போது சவூதி அரேபியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் பைசல் பின் பர்ஹான் அல் சவுத் உடன் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சந்தித்து பேசினர்.

அப்போது, வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, பாதுகாப்பு, கலாசாரம் மற்றும் தூதரக விடயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. பின்னர் ஜெய்சங்கர் கூறியதாவது, வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகியவை இரு நாடுகளின் கூட்டாண்மையில் முக்கிய தூண்களாக உள்ளன. மேற்கு ஆசியாவில் நிலைமை ஆழ்ந்த கவலை அளிக்கிறது.

காசாவில் போர் நிறுத்தத்தையும் பாலஸ்தீன பிரச்சினைக்கு இருதரப்பு தீர்வையும் இந்தியா ஆதரிக்கிறது.

போர் நிறுத்தத்தை இந்தியா மீண்டும் வலியுறுத்துகிறது. மேற்கு ஆசியாவின் ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பதிலும் பொருளாதார வளர்ச்சியை நோக்கி செல்வதிலும் இந்தியாவும் சவூதி அரேபியாவும் ஒரே நிலைப்பாட்டை கொண்டுள்ளன. இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய பயங்கரவாதத் தாக்குதல்கள் கண்டிக்கத்தக்கது. காசாவில் இஸ்ரேல் நடத்திய பதில் தாக்குதல்களில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டது வருத்தம் அளிக்கிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார். (நி-8)

# ரஷ்ய... காட்...

## இராணு...

(பியாங்யாங்) ...

### இராணுவ உ... பாதுகாப்பு ஒப்ப... நாடுகள் கையெ...

இப் புகைப்படங்களைச் சர்வதேச செய்தி நிறுவனமான ராய்ட்டர்ஸ் வெளியிட்டுள்ளது

சர்வதேச சமூகத்தில் இருந்து தன்னை தனிமைப்படுத்திக் கொண்ட நாடாக வட கொரியா உள்ளது. அதன் ஜனாதிபதியாக கடந்த 2011 முதல் கிம் ஜாங் உன் செயற்பட்டு வருகிறார்.

இராணுவ கட்டமைப்புக்கு அதிகம் செலவு செய்யும் வட கொரியா கடந்த 2006 ஆம் ஆண்டு தனது முதல் அணுகுண்டு சோதனையை நடத்தி அணுசக்தி நாடுகளின் பட்டியலில் இணைந்தது.



தெ... எல்லை... டுக்கு... ரிக்கா... செயற்...

# இந்தோனே... எரிமலை...

## விமான சேவைகள்...



(ஜகார்த்தா)

எரிமலை சாம்பல் வானில் 10 கிலோ மீற்றர் (32,808 அடி) உயரத்திற்கு படர்ந்து காணப்படுவதால் கடந்த புதன் கிழமை இந்தோனேசியாவின் பாலி சுற்றுலா தீவுக்கான விமான சேவைகள்... தேச விமா... கள் இரத்து...

வானத்... சாம்பல் ... படுவதால்... ணங்களு... விமான ... இடைநி...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யாவுடன் நெருக்கம் ட்டும் வடகொரியா

## ணுவ உதவி பரிமாற்ற ஒப்பந்தம் கைச்சாத்து

ங்)

**உதவிகளைப் பரிமாறிக் கொள்ளும் ப்பந்தத்தில் ரஷ்யா- வடகொரியா ஆகிய யெழுத்திட்டுள்ளன.**





தென் கொரியா உடனான எல்லை பிரச்சினை, அந்நாட்டுக்கு உதவி செய்யும் அமெரிக்காவை எதிர்ப்பது என செயற்பட்டு வரும் வட கொரியா அவ்வப்போது அணு ஆயுதங்களைப் பயன்படுத்தப் போவதாக மிரட்டலும் விடுத்து வருகிறது. மேலும் சமீப காலமாக ரஷ்யாவுடன் நெருக்கம் காட்டும் வட கொரியா இராணுவ உதவிகளைப் பரிமாறிக்கொள்ளும் பாதுகாப்பு ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டுள்ளது.

தென் கொரியா தாராளவாதத்தைப் பின்பற்றும் நாடாக உள்ள நிலையில் வட கொரியா கடுமையான சட்டங்களையும் அதிக சமூக கட்டுப்பாட்டையும் மக்கள் மீது கொண்ட நாடாக விளங்குகிறது. அந்நாட்டு மக்களின் வாழ்க்கை முறை, தொழில்கள், வாழ்வாதாரம், சமூக நிகழ்வுகள் என என்ன நடக்கிறது என்று வெளியுலகுக்குத்தெரியாத அளவுக்கு அதிக தணிக்கை விதிமுறைகளும் வட கொரியாவில் உள்ளது.

மக்கள் சுதந்திரமாக இல்லை என சர்வதேச சமூகத்தில் பொதுவான கண்ணோட்டம் காணப்படுகிறது. இந்நிலையில் வட கொரியாவில் இதுவரை வெளியுலகுக்குத் தெரியாத கட்டமைப்புகள் மற்றும் இடங்களின் புகைப்படங்களைச் சர்வதேச செய்தி நிறுவனமான ராய்ட்டர்ஸ் வெளியிட்டுள்ளது.

அந்த புகைப்படங்களில் தென் கொரியாவிலிருந்தே காணும் தூரத்தில் உள்ள Gijungdong கிராமம், Liaoning மாகாணத்தில் Dandong பகுதியிலிருந்து பார்க்கக்கூடிய தூரத்தில் உள்ள Sinuiju பகுதி உள்ளிட்ட பல பகுதிகள் இடம்பெற்றுள்ளன. (நி-8)

# னேசியா-பாலியில் லை குமுறல்

## கள் இரத்து



வைகளைப் பல சர்வ
ச விமான நிறுவனங்
இரத்து செய்துள்ளன.
வானத்தில் எரிமலை
பல் சூழ்ந்து காணப்
வதால் பாதுகாப்பு கார
ங்களுக்காக பாலிக்கு
மான பயணங்கள்
டை நிறுத்தப்பட்டதாக

ஜெட்ஸ் டார் மற்றும் குவாண்டாஸ் ஆகிய விமான சேவைகள் தெரிவித்துள்ளன.

அதேவேளை, ஏர் ஏசியா மற்றும் விர்ஜின் ஆகிய விமான சேவைகளும் விமான பயணங்களை இரத்துசெய்துள்ளதாக ஃப்ளைட்ராடார் 24 என்ற விமான கண்காணிப்பு வலைத்தளம் தெரிவித்துள்ளது.

இந்தோனேசியாவின் சிறந்த சுற்றுலாப் பகுதியாக பாலி காணப்படுவதோடு, அவுஸ்திரேலிய சுற்றுலா பயணிகளை கவர்ந்த இடமாக திகழ்கிறது. பாலியில் இருந்து சுமார் 800 கிலோ மீற்றர் (497 மைல்) தொலைவில் உள்ள கிழக்கு நுசா தெங் கரா மாகாணத்திலுள்ள லெவோடோபி லக்கி-லக்கி எரிமலை கடந்த 3 ஆம் திகதி முதல் தடவையாக குமுறியதில் சிக்கி 9 பேர் உயிரிழந்தனர்.


இந்த எரிமலை செவ்வாய்க்கிழமை மீண்டும் குமுறத் தொடங்கி சாம்பல்களை வெளியேற்றி வருகிறது.

இந்தோனேசியாவில் 130 எரிமலைகள் உயிர்ப்புடன் உள்ளது. பசிபிக் எரிமலைப் பகுதியில் (ரிங் ஆஃப் ஃபயர்) அமைந்துள்ளது. இது பல்வேறு டெக்டோனிக் தகடுகளின் மேல் அதிக நில அதிர்வு செயற்பாடுகளைக் கொண்டுள்ளது.

இந்நிலையில், லெவோ டோபி எரிமலை குமுறனினால் வெளியேறும் சாம்பல் துகள்கள் வானில் 10 கிலோ மீற்றர் உயரத்தை எட்டியுள்ளது. (நி-8)

# ட்ரம்ப் மற்றும் ஜோ பைடன் வெள்ளை மாளிகையில் சந்திப்பு

(வோஷிங்டன்)



அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியுடன் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஜோ பைடன் இருவரும் வெள்ளை மாளிகையில் சந்தித்துள்ளனர் என வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவு செய்யப்பட்டதையடுத்து அடுத்த ஆண்டு ஜனவரி 20ஆம் திகதி பதவியேற்கவுள்ளார்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்பும் சந்தித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பு வெள்ளை மாளிகையில் உள்ள ஓவல் அலுவலகத்தில் நடந்ததுடன் ஜோ பைடன் ட்ரம்புக்கு விருந்து அளித்தும் கௌரவித்துள்ளார்.

4 ஆண்டுக்குப் பின்னர் முதல் முறையாக வெள்ளை மாளிகைக்கு ட்ரம்ப் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீரற்ற காலநிலை

# மரம் விழுந்து 7 வீடுகள் சேதம்

## இருவர் காயம்

(இரத்தினபுரி)

இரத்தினபுரி - காவத்தை, நீலகாமம் பகுதியில் நெடுங் குடியிருப்பு ஒன்றின் மீது மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் 2 பேர் காயமடைந்துள்ளனர்.

குறித்த பகுதியில் நிலவும் சீரற்ற காலநிலையினால் மரம் முறிந்து வீழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நெடுங்குடியிருப்பில் உள்ள 7 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் 6 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறித்த சம்பவத்தில் காயமடைந்த இருவரில் ஒருவர் இரத்தினபுரி வைத்தியசாலையிலும் மற்றுமொருவர் காவத்தை ஆதார வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சில பகுதிகளில் காற்று அதிகரித்த வேகத்தில் வீசக் கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்வதற்குத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (நி-8)

## 10 தொடருந்து சேவைகள் இரத்து

(கொழும்பு)

தொடருந்து சாரதிகள் மற்றும் உதவியாளர்கள் இல்லாத காரணத்தினால் நேற்று சேவையில் ஈடுபடவிருந்த 10 தொடருந்து பயணங்கள் இரத்து செய்யப்பட்டது.

மேலும், 22 தொடருந்து பயணங்களை நடத்துவது குறித்து நிச்சயமற்ற தன்மை நிலவுவதாக நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

புகையிரத சாரதிகள் மற்றும் நடத்துனர்களை பணியமர்த்தாத காரணத்தினால் குறித்த பயணங்கள் இரத்து செய்யப்படுவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதனால் புகையிரதப் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாக புகையிரத நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 250 | 250 | 150-200 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 350 | 200 | 300 |
| தக்காளி | 320 | 300 | 300 | 250 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 240 | 100-120 | 150 |
| கோவா | 200 | 180 | 250 | 260 | 250 |
| கரட் | 150 | 200 | 250 | 150 | 250 |
| பூசணி | 100 | 100 | 280 | 90 | 150 |
| புடோல் | 120 | 200 | 120 | 200 | 200 |
| வாழைக்காய் | 100 | 100 | 150 | 60-80 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 250 | 150-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 400 | 240 | 250 | 300 | 300 |
| பாகற்காய் | 400 | 550 | 450 | 450-500 | 800 |
| வெண்டக்காய் | 100 | 100 | 120 | 60-80 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 160 | 130 | 200 |
| பயற்றங்காய் | 200 | 200 | 180 | 150-200 | 250 |
| லீக்ஸ் | 200 | 250 | 250 | 280 | 300 |
| பீற்றூட் | 150 | 150 | 180 | 100 | 250 |
| கறிமிளகாய் | 500 | 500 | 600 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 400 | 120-160 | 400 |
| போஞ்சி | 350 | 520 | 450 | 350 | 600 |
| கத்தரிதம்புள்ள | 100 | 150 | 400 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 150 | 160 | 120 | 40-60 | 150 |
| தேசிக்காய் | 400 | 600 | 400 | 500-620 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 80-140 | 120-180 |
| இராசவள்ளி | -- | 850 | 650 | 620 | 1600 |
| வெங்காயப்பூ | 450 | 450 | 400 | -- | 500 |
| முள்ளங்கி | 100 | 120 | 150 | 100 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 80 | [illegible] |
| ஈரப்பலா | 120 | 150 | 60 | -- | [illegible] |

# இன்று ஒரு தகவல் 264



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## ஆறாவது அறிவு

வாழ்க்கையில் மிகவும் அடிபட்டு அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கின்ற ஒருவர் வந்தார். மனம் நொந்துபோய் பேசினார். இந்த உலகத்திலே மனிதனாகப் பிறப்பதை விட மாடாக பிறந்திருக்கலாம் சார் என்றார். தீடிர் என்று வந்து இப்படிச் சொன்னால் அது எப்படி சார் என்றேன். இப்போது தான் அந்த ஞானோதயமே எனக்கு வந்தது சார் என்றார். அதற்கு என்ன காரணம் என்றேன்.

என் மகனுக்கு வேலை தேடுகின்றேன் கிடைக்கவில்லை. பெண்ணிற்கு மாப்பிள்ளை தேடுகின்றேன் கிடைக்கவில்லை. வீடு கட்ட கடன் கேட்கின்றேன் கிடைக்கவில்லை. மாடாக பிறந்திருந்தால் இது மாதிரி கவலை எல்லாம் கிடையாது. பேசாமல் வைக்கோலை தின்று விட்டு அசைபோட்டுக்கொண்டே படுத்திருக்கலாமே என்றார். அதன்பின் தான் இவர் சொன்ன விடயத்தை நானும் கொஞ்சம் அசையோடு ஆரம்பித்தேன் மனதிற்குள்ளே. இயற்கையைப் பொறுத்த வரைக்கும் அது நாம் எல்லோரும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று தான் ஆசைப்படுகின்றது.

விலங்குகள், பறவைகள், தாவரங்கள், மற்ற உயிரினங்கள் எல்லாம் நல்லபடியாக இருக்க வேண்டும் என்பது தான் இயற்கையினுடைய விருப்பம். இயற்யையின் அமைப்பை புரிந்து கொண்டால் அது புரியும். இருந்தாலும் இந்த ஆள் சொன்னதன் பிறகு தான் ஒரு முக்கியமான விடயம் புரிந்தது.

இந்த உலகத்திலே முக்கியமான ஒரு ஆறு பிரச்சினைகள். அந்த ஆறு பிரச்சனைகளும் ஆடு, மாடு, செடி, கொடிகளுக்கு இல்லை. ஆனால் மனிதன் அந்தப் பிரச்சினையை சந்திக்க வேண்டியிருக்கின்றது. அந்த ஆறு பிரச்சினைகள் என்னென்ன தெரியுமா? முதலிலே ஆடு, மாடு எல்லாம் நமக்கு என்று ஒரு வீடு இல்லையே என கவலைப்பட்டுக் கொண்டு உட்கார்ந்திருப்பது இல்லை. ஆனால் மனிதனுக்கு வீடு தேவைப்படுகின்றது.

இரண்டாவது ஆடைப் பிரச்சினை. ஒரு கோழி இருக்கிறது. அது என்ன நமக்கு உடுத்திக் கொள்வதற்கு ஒரு சட்டையில்லையே என்றா கவலைப்பட்டுக் கொண்டிருக்கும். ஆனால் மனிதனுக்கு அந்தப் பிரச்சினை உண்டு. மூன்றாவது கல்விப் பிரச்சினை. ஒரு பசு மாடு கவலையாக நின்று கொண்டிருந்தது. நீங்கள் அருகில் போய் ஏன் பசு மாடே கவலைப்படுகின்றாய் என்று கேட்கின்றீர்கள்.

என் கன்றுக்குட்டிக்கு L.K.Gஇலே இடம் கிடைக்கவில்லை. கையிலே பணமும் இல்லை டொனேஷன் கொடுப்பதற்கு சிபாரிசுக்கு யாரைப் பிடிப்பது என்றும் தெரியவில்லை. இப்படியா சொல்லிக்கொண்டிருக்கும். அதற்கு எந்தக் கவலையும் கிடையாது. ஆனால் மனிதனுக்கு அந்தக் கவலை உண்டு. நான்காவது வேலைவாய்ப்புப் பிரச்சினை. வேலை கிடைக்கவில்லையே என்று வேப்பமரம் கவலைப்பட்டதில்லை. ஆனால் மனிதன் கவலைப்படுகின்றான். ஐந்தாவது திருமணப்பிரச்சினை. எருமைமாடு, பசு மாடு எல்லாம் பெண்ணிற்கு மாப்பிள்ளை தேடிக்கொண்டா அலைகின்றது. பத்திரிகையிலே விளம்பரமா கொடுக்கின்றது?

ஆறாவது பணம் சம்பந்தமான பிரச்சினை. ஆடு, மாடு எல்லாம் பணத்தை சேமிக்க வேண்டும் என்றோ, எதிலேயாவது முதலீடு செய்ய வேண்டும் என்று நினைப்பதில்லை. பணத்தை எப்படி காப்பாற்ற வேண்டும் என்றும் கவலையும் அவற்றிக்கு இல்லை. குதிரை குளம்போடு பிறக்கின்றது. காடு, மேடு எல்லாம் கவலை இல்லாமல் திரியலாம். ஆடு உடம்பிலே உரோமத்துடன் பிறக்கின்றது. குளிரைப்பற்றி கவலைப்படத் தேவையில்லை. ஆனால் மனிதன் மட்டும் தான் ஒன்றும் இல்லாமல் பிறக்கின்றான். ஏன் இந்தப் பாகுபாடு? இதை ஒரு பெரியவரிடம் கேட்டேன் அவர் அதற்கு பதில் சொன்னார். எப்படித் தெரியுமா?

அவரும் இதே கேள்வியை இயற்கையிடம் கேட்டாராம். அதற்கு இயற்கை சொல்லியதாம் வேறு யாருக்கும் கொடுக்காத ஒரு வலுவான கருவியை மனிதனுக்கு கொடுத்திருக்கின்றேனே. அந்தக் கருவியை உபயோகப்படுத்தி அந்த ஆறு பிரச்சினையை மட்டுமல்ல 6 கோடி பிரச்சினைகள் இருந்தாலும் அதைச் சமாளிக்கலாம். அது தான் ஆறாவது அறிவு. அதை உபயோகப் படுத்தினால் காலிற்கு செருப்பு தயார் செய்யலாம். குளிருக்கு போர்வை தயார் செய்யலாம். என்ன வேண்டும் என்றாலும் செய்யலாம். இது தான் இயற்கையோட பதில். அதனாலே நாம் செய்ய வேண்டிய முதல் காரியம். இயற்கையை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் நாம் இதை எந்தளவிற்கு சரியாக புரிந்துகொள்கின்றோம். இயற்கையினுடைய படைப்பை நாம் சரியாக புரிந்து கொள்வது இல்லை சார். அதற்கு ஒரு உதாரணம் சொல்கின்றேன் கேளுங்கள்.

நகரத்திலே இருந்து ஒருவர் கிராமத்திற்கு வந்தார். ஆகா! எவ்வளவு அழகான பசு. இயற்கையினுடைய படைப்பு. அது சரி இதற்கு எல்லாம் ஏன் கொம்பு இல்லை என்று கேட்டார். அதற்கு இன்னொருத்தர் பதில் சொன்னார். பசு மாட்டிற்கு கொம்பு இல்லாததற்கு பல காரணங்கள் உண்டு. கன்றுக் குட்டியாக இருந்தால் கொம்பு இருக்காது. பசு வளர்ந்து பெரிதானதன் பின் தான் கொம்பு முளைக்கும் என்பது ஒரு காரணம். சில சமயம் வளருகின்ற கொம்பை எடுத்து விடுவதும் உண்டு. அதுவும் ஒரு காரணம். ஆனால் இதற்கு ஏன் கொம்பு இல்லை என்றால் அதற்குக் காரணம் அது பசு இல்லை குதிரை என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கும்

## வாக்களித்த பின் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

**மக்களுக்கு ஏற்புடையதான சட்டங்களை நிறைவேற்றி, புதிய பாராளுமன்ற கலாசாரத்தை உருவாக்க முடியும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**



தேசிய மக்கள் சக்தி வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கை ஒன்றிணைக்கும் ஆட்சியை அமைக்கும் என்றும் ஜனாதிபதி உறுதிபட குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் பத்தாவது பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தலில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது வாக்கை பதிவு செய்த பின் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதித் தேர்தல் வெற்றியின் பின்னர் நாட்டில் காணப்பட்ட ஜனநாயக ரீதியிலான சுதந்திரத்தை இனிவரும் தேர்தல் காலங்களிலும் எதிர்பார்ப்பதாகவும் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் மக்கள் அதை உணர்ந்துள்ளனர் என்றும் அதனையே இந்நாட்டின் தேர்தல் கலாசாரமாக மாற்ற எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். மேலும், 196 பாராளுமன்ற உறுப்புரிமைக்காக 8361 வேட்பாளர்கள் இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்ற நிலையில் 29 ஆசனங்கள் தேசிய பட்டியல் ஊடாக தெரிவு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# பொதுத் தேர்தல் வாக்களிப்பு நிலையத்தில் பணியாற்றிய பெண் அதிகாரி திடீர் மரணம்

(கொழும்பு)

கொழும்பு, கெஸ்பேவ, பொல்ஹேன பகுதியில் உள்ள வாக்களிப்பு நிலைய அதிகாரியாக கடமையாற்றிய பெண் ஒருவர் திடீர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பயாகல இந்துருவகொடவில் வசிக்கும் சாமிகா ருவானி லியனகே என்ற 48 வயதுடைய திருமணமாகாத பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு புதுக்கடை மேல் நீதிமன்றில் கடமையாற்றும் இப்பெண் நேற்று முன்தினம் காலை வாக்களிப்பு நிலையத்தின் பொறுப்பதிகாரியாக தனது கடமைகளை ஆரம்பித்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணுடன் மேலும் 15 பெண் அதிகாரிகளும் பணியில் இருந்துள்ளனர். இரவு 7.40 மணியளவில் ஒரு அறையில் தங்கியிருந்தபோது அவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது.

உடனடியாக அங்கிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவரை சிகிச்சைக்காக பிலியந்தலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தால் வாக்குச்சாவடி பணிகளுக்கு எந்தவித இடையூறும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (நி-8)

# நாட்டை மீட்க அனைவரும் கைகோர்ப்போம்

## சஜித் பிரேமதாச

(கொழும்பு)

பொதுத் தேர்தல் ஜனநாயக மற்றும் அமைதி முறையான, மக்களின் உரிமைகளை முதன்மைப்படுத்தும் சுதந்திரமான தேர்தலாக அமையட்டும். சுதந்திரமாக மக்கள் தங்கள் கருத்துகளையும் விருப்பங்களையும் தெரிவிக்கச் சந்தர்ப்பம் கிட்டட்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

வீழ்ச்சி கண்டு அதள பாதாளத்துக்குக்குள் இருக்கும் தேசத்தை, வங்குரோத்தடைந்துள்ள நாட்டை இந்த பாதாளத்திலிருந்து மீட்க அனைவரும் கைகோர்த்து, நாட்டின் மீட்சிக்கு 220 இலட்சம் மக்களும் பங்களிக்குமாறும் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்தார்.

2024 பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி-8)

# இந்தப் பொதுத் தேர்தல் ஒரு புதிய தொடக்கம்

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

"ஒரு கட்சி என்ற வகையில், இந்த ஆண்டு பொதுத் தேர்தலை நாங்கள் வலுவான மற்றும் சிறந்த நிலைப்பாட்டுடன் எதிர்கொள்கிறோம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எதிர்கால தேர்தல்களின் வெற்றியின் தொடக்கமாக இந்தத் தேர்தலை நாங்கள் கருதுகிறோம் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்த பொதுத் தேர்தலை ஒரு புதிய தொடக்கம் என்று கூறலாம். நாட்டை நேசிக்கும், நாட்டின் ஒற்றுமையை நேசிக்கும், கலாசாரத்தை நேசிக்கும் ஒரு அரசியல் தலைமுறை நம் நாட்டில் மீண்டும் உருவாக்குவோம் என்று நாங்கள் நம்புகிறோம் எனத் தெரிவித்தார். (நி-8)

# வாக்களிக்க உதவி கோரிய வயோதிபப் பெண்

## மோசடி செய்த உத்தியோகத்தர் பணி நீக்கம்

(கல்முனை)

வாக்குச்சாவடியில் வாக்களிக்கச் சென்ற வயோதிபப் பெண் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தரிடம் சின்னமொன்றை கூறி அதில் புள்ளடியிட்டு உதவி செய்யுமாறு கேட்க அப்பெண் கூறிய சின்னத்துக்கு பதிலாக வேறொரு சின்னத்துக்கு புள்ளடியிட்டுக் கொடுத்த உத்தியோகத்தர் உடனடியாக கடமையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு காத்தான்குடி ஹிஸ்புலா பாலர் பாடசாலை வாக்குச்சாவடியில் கடமையாற்றிய உத்தியோகத்தரே பணியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்ற நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி வாக்குச்சாவடியில் வாக்குப் பதிவின்போது வயோதிபப் பெண்ணுக்கு உதவி செய்ய முன்வந்த உத்தியோகத்தர், தவறான சின்னத்தில் புள்ளடியிட்டுக் கொடுத்த காரணத்தால் உடனடியாக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் உதவி ஆணையாளர் எம்.பி.எம். சுபயான் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, இந்த வாக்குச்சாவடியில் வயோதிபப் பெண்ணொருவர் வாக்களிப்பதற்கு உதவி கோர, அவருக்கு உதவி செய்யுமாறு அங்கு கடமையாற்றிவரும் உத்தியோகத்தர் ஒருவரை வாக்குச்சாவடிக்கு பொறுப்பான தேர்தல் பொறுப்பதிகாரி பணித்துள்ளார்.

அதன் பின்னர், அந்தப் பெண் ஒரு சின்னத்தை தெரிவித்து, அதற்கு புள்ளடியிடுமாறு உத்தியோகத்திடம் தெரிவித்தார்.

அதனையடுத்து, அந்த உத்தியோகத்தர் பெண் கூறாத வேறொரு சின்னத்துக்கு புள்ளடியிட்டு வாக்குச்சீட்டை மடித்து பெண்ணிடம் வழங்கியுள்ளார்.

அவர் அந்த வாக்குச்சீட்டை விரித்துப் பார்த்து, தான் தெரிவித்த சின்னத்துக்கு புள்ளடியிட்டுள்ளாரா என பார்த்தபோது வேறொரு சின்னத்துக்கு புள்ளடியிடப்பட்டுள்ளமை தெரியவர, அங்கு பெருங்குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, அந்த வாக்குச்சாவடிக்கு மாவட்ட தேர்தல் திணைக்கள உதவி ஆணையாளர் சென்று உடனடியாக அந்த உத்தியோகத்தரை கடமையில் இருந்து நீக்கி அவரை தேர்தல் திணைக்களத்துக்கு விசாரணைக்காக அழைத்துச் சென்றதுடன், மீண்டும் ஏற்பாடு செய்யப்பட்டு உரிய முறையில் அப்பெண்ணின் வாக்கு பதிவு செய்யப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 631





எதற்கும் அஞ்சாத அஸகாய சூரனையே இந்தக் காரியத்துக்கு நாம் அனுப்ப வேண்டும். இன்றைக்கு நான் அரண்மனை முற்றத்துக்கு வந்து கொண்டிருந்தபோது என் கண்ணாலேயே பார்த்தேனே! அந்த வைத்தியனை என்ன பாடுபடுத்திவிட்டான். நான் குறுக்கிட்டுத் தடுத்திராவிட்டால் வைத்தியர் மகன் யமனுக்கு வைத்தியம் செய்யப் போயிருப்பான்."

இளைய பிராட்டி இதைக் கேட்டுப் பூரிப்பு அடைந்தாள். ஆயினும் சிறிய தயக்கத்துடன் "வீரனாயிருந்தால் மட்டும் போதுமா? படபடப்புக் காரனாயிருக்கிறானே? எவ்வளவு விரைவில் சண்டை தொடங்கிவிட்டான்!"

"அதற்கு வேணுமானால் பின்னோடு என்னுடைய சீடன் திருமலையையும் அனுப்பி வைக்கிறேன். நிதானமான யோசனைக்குப் பெயர்போனவன் ஆழ்வார்க்கடியான்!" என்றார் அநிருத்தர்.

இளையபிராட்டி தன் மனத்திற்குள், இவருடைய உள்ளத்தில் இருப்பதைக் கடவுளும் அறிவாரோ, என்னமோ தெரியவில்லை. ஒற்றனுக்குத் துணையாக ஒற்றன் ஒருவனையே அனுப்பி வைக்க விரும்புகிறார் போலும்!" என்று எண்ணிக் கொண்டாள்.

### 29 ஆம் அத்தியாயம்
### வானதியின் மாறுதல்

குந்தவை வந்தியத்தேவனைச் சிறையிலிருந்து மீட்டு மறுபடியும் பிரயாணம் அனுப்புவதற்காகப் புறப்பட்ட போது வானதி எதிரே வந்தாள். இளைய பிராட்டியிடம் அடிபணிந்து நின்றாள்.

"என் கண்ணே! உன்னை விட்டுவிட்டு வந்து விட்டேன். இன்னும் கொஞ்சம் முக்கியமான அலுவல் இருக்கிறது. அதை முடித்துவிட்டு வந்துவிடுகிறேன். சற்று நேரம் தோட்டத்தில் சென்றிரு! ஓடைப்பக்கம் மட்டும் போகாதே" என்றாள்.

"அக்கா! தங்களுக்கு இனி தொந்தரவு கொடுக்கமாட்டேன். கொடும்பாளூருக்குப் போக விரும்புகிறேன், அனுமதி கொடுங்கள்!" என்றாள் வானதி.

"இது என்ன, என் தலையில் நீயுமா இடியைப் போடுகிறாய்? உனக்கு என் பேரில் என்ன கோபம்? உன் பிறந்தகத்தின் மீது திடீரென்று என்ன பாசம்?"

"உங்கள் பேரில் நான் கோபங் கொண்டால் என்னைப் போல் நன்றி கெட்டவள் யாரும் இல்லை. என் பிறந்தகத்தின் பேரில் புதிதாகப் பாசம் ஒன்றும் பிறந்துவிடவும் இல்லை. தாயும் தந்தையும் இல்லாத எனக்குப் பிறந்தகம் என்ன வந்தது? எங்கள் ஊருக்குப் பக்கத்தில் உள்ள காளி கோவிலுக்குப் பூசைபோடுவதாக என் தாயார் ஒருமுறை வேண்டிக்கொண்டாளாம். அதை நிறைவேற்றுவதற்கு முன் அவள் கண்ணை மூடிவிட்டாள். எனக்கு அடிக்கடி மயக்கம் வருகிறதல்லவா? ஒருவேளை அந்த வேண்டுதலை நிறைவேற்றாததால் தான் இப்படி என்னைப் படுத்துகிறதோ என்னமோ?"

"அதற்காக நீ அவ்வளவு தூரம் போகவேண்டியதில்லை நானே சொல்லி அனுப்பி அந்த வேண்டுதலை நிறைவேற்றச் சொல்கிறேன்."

"அது மட்டுமல்ல அக்கா! என் பெரிய தகப்பனார் இலங்கையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கிறார். அவர் தஞ்சையைத் தாண்டிப் பழையாறைக்கு வர மாட்டார். அவர் வரும்போது நான் கொடும்பாளூரிலிருக்க விரும்புகிறேன். அவரிடம் இலங்கையில் நடந்தவற்றையெல்லாம் நேரில் கேட்க ஆசைப்படுகிறேன்!"

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## ஒரு மூதாட்டியின் கதை



(நேற்றைய தொடர்ச்சி...)

அன்று மதியம் வழிப்போக்கன் ஒருவன் அந்த உணவு விடுதிக்குள் நுழைந்தான். மூதாட்டியிடம் ஐந்து பணம் கொடுத்துவிட்டு அம்மா, எனக்கு அதிகமான பசியாக இருக்கிறது. எலுமிச்சங்காய் அளவு சோறாவது எனக்கு சீக்கிரமாகப் போடு என்றான்.

மூதாட்டி நீ கேட்டபடியே எலுமிச்சங்காய் அளவு சோறு போடுகிறேன் என்று கூறினாள்.

ஒரு வாழை இலையை விரித்து, தண்ணீர் தெளித்து, எலுமிச்சங்காய் அளவு சாதம் மட்டும் உருட்டி அவன் இலையில் போட்டாள்.

அதைப் பார்த்ததும் வழிப்போக்கன் இது எப்படி என் வயிற்றுக்குப் போதும்? வயிற்றுப் பசிக்குத்தானே சோறு சாப்பிடுகிறோம்? என்றான். நீ கேட்டபடி எலுமிச்சங்காய் அளவு சோறு போட்டுவிட்டேன். விரும்பினால் சாப்பிடு! இல்லையானால் எழுந்து போ! என்று சொன்னாள்.

அப்படியா? எனக்கு இது வேண்டாம். நான் கொடுத்த ஐந்து பணத்தைத் திருப்பிக் கொடு, நான் போகிறேன் என்றான் வழிப்போக்கன்.

உணவு விடுதிக்கு உரியவள் ஐந்து பணத்தைத் திருப்பிக் கொடுக்க மறுத்துவிட்டாள்.

வழிப்போக்கன் மரியாதை ராமனைத் தேடிச் சென்றான். நீதிபதியான மரியாதை ராமனிடம் நடந்ததைக் கூறி முறையிட்டான். நீதிபதி உணவு விடுதி நடத்தி வந்த மூதாட்டிக்கு ஆள் அனுப்பி அழைத்துவரச் செய்தார்.

விடுதிக்குச் சொந்தக்காரியான அம் மூதாட்டி நீதிபதியின் முன் நின்று ஐயா! வழிப்போக்கன் கேட்டபடி, அவன் கொடுத்த பணத்திற்குச் சோறு போட்டுவிட்டேன் என்று கூறினாள். அத்தோடு தான் இலையில் உருட்டிப் போட்ட எலுமிச்சங்காய் அளவு சோற்று உருண்டையையும் சாட்சியமாக எடுத்துக் காட்டினாள்.

அதை எல்லாம் தெரிந்துகொண்ட பிறகு, நீதிபதி மரியாதை ராமன் புன்னகை தவழ, அம்மா! நீ என்ன ஒப்புக் கொண்டாய்? எலுமிச்சங்காய் அளவு சோறு போடுவதாகத்தானே ஒப்புக்கொண்டாய்? நீ போட்ட இந்த சோற்றுப் பருக்கை ஒன்றே ஒன்றாவது இருக்கிறதா பார்! ஆகவே, வழிப் போக்கன் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடு! அல்லது எலுமிச்சங்காய் அளவு பருமன் உள்ள ஒரு சோற்றுப் பருக்கையையாவது போடு என்று தீர்ப்பு வழங்கினார். சொல்லின் நுணுக்கத்தை உணர்ந்த உணவு விடுதிக்கு உரிமைக்காரியான மூதாட்டி அந்த அளவு பருமனாகும் சோற்றுக்கு உரிய அரிசிக்கு நான் எங்கே போவேன்? என்று கூறி, வழிப்போக்கன் கொடுத்த ஐந்து பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டு நீதிக்கு அடிபணிந்து நடந்தாள்! (முற்றும்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கையும் கடின உழைப்பும் உங்களுக்கு எப்போதும் வெற்றியைத் தரும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேர்தல் முடிவுகளில் இருந்து அனைவரும் கற்றுக் கொள்ளுங்கள்

தேர்தல் முடிவுகள் இரவோடு இரவாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

பொதுவில் தபால்மூல வாக்களிப்பின் முடிவுகள் இம்மியும் பிசகாமல் தேர்தல் முடிவுகளாக அமைவதைக் கடந்த காலத் தேர்தல்கள் நமக்குக் கற்றுத் தந்துள்ளன.

ஆக, ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்தப் புறப்பட்ட மக்கள் அதனை முழுமையாகவும் நிறைவாகவும் செய்தருள முடிவு செய்து விட்டனர் என்பது புரிகிறது.

அதேநேரம் நம் வடக்கு மாகாணத்தின் தேர்தல் முடிவுகளும் நம் அரசியல்வாதிகளுக்கு நிறைந்த விடயங்களைக் கற்றுக் கொடுக்கும் என்பதில் மாற்றுக்கருத்திருக்க முடியாது.

அதிலும் யாழ்ப்பாண மாவட்டத்தின் வாக்களிப்பு வீதம் வீழ்ச்சி கண்டுள்ளதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

எது எவ்வாறாயினும் தேர்தல் முடிவுகள் முன்பு ஒருபோதும் இல்லாத பட்டறிவை தமிழ் அரசியல்வாதிகளுக்கு நிச்சயம் கற்றுத் தரும் என்பது நிறுதிட்டமான உண்மை.

இவை ஒருபுறமிருக்க, ஒட்டுமொத்தத் தேர்தல் முடிவுகள் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் கரங்களை வலுவாகப் பலப்படுத்தும் என்பது வெளிப்படுகிறது.

இங்குதான் இனவாதத்திலிருந்து இலங்கைத் திருநாட்டை மீட்டெடுக்க வேண்டும் என்பதில் சிங்கள மக்கள் உறுதியாக இருப்பது பட்டவர்த்தனமாகத் தெரிகிறது.

ஆம், இனவாதம் பேசிப் பேசி இந்த நாட்டைக் கந்தறுத்த கயவர்கள் பாராளுமன்ற ஆசனங்களில் அமரக்கூடாது என்ற நெஞ்சுரத்தோடு சிங்கள மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடிவு செய்தனர்.

முன்னதாக, ஜனாதிபதித் தேர்தலில் எவரும் எதிர்பார்க்காத வகையில் அநுர குமார திஸாநாயக்கவை சிங்கள மக்கள் ஜனாதிபதியாக்கினர்.

அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகியதும் அவர் முன்னெடுத்த விடயங்கள் இன மத பேதமின்றி அனைத்து மக்களையும் அவர் மீது நம்பிக்கை கொள்ள வைத்தது.

ஆம், அநுர குமார திஸாநாயக்கவின் பதவியேற்பு என்பது மிகவும் எளிமையாக இடம்பெற்றது.

அந்த எளிமை மக்களைக் கவர்ந்தது. அதேபோன்று முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் ஜனாதிபதிகளிடம் இருந்த அரச வாகனங்களை மீள ஒப்படைக்குமாறு விடுத்த அறிவிப்பு ஜனாதிபதி அநுரவின் ஆட்சி மீது மக்கள் விசுவாசம் கொள்ளச் செய்தது.

அந்த விசுவாசம் பொதுத் தேர்தல் முடிவுகளிலும் நிச்சயம் பிரதிபலிக்கும் என்பதில் சலனத்துக்கு இடமில்லை.

அதேநேரம் மக்கள் வழங்கிய தீர்ப்பு என்பது இந்த நாட்டில் அனைத்து மக்களும் ஒற்றுமையாக வாழ்வதற்கானது.

எனவே ஜனாதிபதி அநுரவின் முதற்பணி இனவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, இந்த நாட்டின் அனைத்து மக்களும் சம உரிமையோடு வாழ்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

# ஒரு வார காலங்களுக்கு ஆர்ப்பாட்டங்கள் நடத்தத் தடை

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

தேர்தல் முடிவுகள் வெளியான ஒரு வாரத்திற்குத் தேர்தலுக்கு பிந்தைய ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை விதிக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான வாக்குப் பதிவு நேற்று மாலை 4.00 மணியுடன் நிறைவடைந்தது.

காலை 7.00 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது.

அந்த காலப்பகுதியில் தேர்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 49 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர் கொழும்பு, கேகாலை, சீதாவாக்க, கொழும்பு வடக்கு, களுத்துறை, களனி, தெல்தானிய, மாத்தறை மற்றும் முல்லைத்தீவு ஆகிய இடங்களில் தலா இரண்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. (ம-7)

# பலமான எதிர்க்கட்சி இருப்பது நாட்டுக்கு நன்மை பயக்கும்

### பிரதமர் ஹரிணி அமரசூரிய

ஆளும் தரப்புக்கு புதியவர்களைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதை போன்று எதிர்க்கட்சிக்கும் புதியவர்களைத் தெரிவு செய்ய வேண்டும். சிறந்த மற்றும் பலமான எதிர்க்கட்சி இருப்பது நாட்டுக்கு நன்மை பயக்கும். 21 ஆம் திகதிக்குப் பின்னர் எமது கொள்கைத் திட்டத்தை முறையாக செயற்படுத்துவோம் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கொழும்பு - மிரிஹான பகுதியில் வியாழக்கிழமை வாக்களித்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமக்குப் பதவி முக்கியமல்ல, பலமான பாராளுமன்றத்தை அமைப்பதையே எதிர்பார்த்துள்ளோம்.

பெரும்பான்மை பலம் எமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை முழுமையாக உள்ளது. பதவிகள் தொடர்பில் எமது அணிக்குள் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது.

10 ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு எதிர்வரும் வியாழக்கிழமை (21) கூடும். ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் முன்வைத்த கொள்கைத் திட்டத்தை சிறந்த முறையில் செயற்படுத்துவோம்.

உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

புதியவர்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்புமாறு நாங்கள் குறிப்பிடும் போது எதிர்தரப்பினர் பழையவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என்று குறிப்பிட்டார்கள்.

பழையவர்கள் நாட்டுக்கு என்ன செய்தார்கள் என்பதை ஆராய வேண்டும். அத்துடன் அனுபவமில்லாதவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்ப கூடாது என்று குறிப்பிடுவதை அவதானிக்க முடிகிறது.

அரச நிதியை மோசடி செய்த அனுபவமும், பாராளுமன்றத்தில் முறையற்ற வகையில் செயற்பட்ட அனுபவமும் எமக்கு கிடையாது.

ஆளும் தரப்புக்கு புதியவர்களைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதை போன்று எதிர்க்கட்சிக்கும் புதியவர்களைத் தெரிவு செய்ய வேண்டும். சிறந்த மற்றும் பலமான எதிர்க் கட்சி இருப்பது நாட்டுக்கு நன்மை பயக்கும் என்றார். (ம-7)

## தேர்தல் சுவரொட்டிகளுடன் அநுராதபுரத்தில் ஒருவர் கைது

அநுராதபுரம், தந்திரிமலைப் பிரதேசத்தில் தேர்தல் சுவரொட்டிகளுடன் சந்தேக நபரொருவர் நேற்று வியாழக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளதாக தந்திரிமலை பொலிஸார் தெரிவித்தனர்.

தந்திரிமலை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் அநுராதபுரம், தந்திரிமலை, தம்பியாவ பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தந்திரிமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

### கோடரியுடன் வந்ததால்

## வேடுவ சமூக தலைவருக்கு வாக்களிக்க அனுமதி மறுப்பு

(கொழும்பு)

தம்பனை வேடுவ சமூகத்தின் பிரதி தலைவரும் குடும்பத்தினரும் வாக்களிப்பு நிலையத்திற்கு கோடரியுடன் வந்ததால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

தம்பனையில் உள்ள வேடுவசமூகத்தின் பிரதி தலைவர் கன்பன்டிய எத்தோவும் அவரது குடும்பத்தினரும் தேர்தல் வாக்களிப்பு நிலையத்திற்குள் கோடரியுடன் நுழைந்துள்ளனர்.

எனினும் அவரது தோளில் கோடரியை அவதானித்த அதிகாரிகள் அவருக்கு அனுமதி மறுத்தனர்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள தம்பனை வேடுவ சமூகத்தின் பிரதி தலைவர் வேடுவ சமூகத்தின் கலாச்சாரம் மற்றும் உரிமைகள் பற்றி அறியாத அதிகாரிகளை அரசாங்கம் தம்பனையில் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தக் கூடாது என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெளிநாடுகளிற்கும் நீதிமன்றங்களிற்கும் கோடாரியுடன் செல்வதற்கு எங்களிற்கு அனுமதி வழங்கியுள்ளனர் வாக்களிப்பு நிலையங்களிற்குள் செல்வதற்கு எந்த தடையும் இருக்ககூடாது என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

### வாக்காளர்களுக்கு

## பணம் வழங்கிய வேட்பாளர் கைது

(கொழும்பு)

தேர்தல் விதிமுறைகளை மீறி கற்பிட்டி அல்மனார் முகாமுக்கு அருகில் வாக்காளர்களுக்குப் பணம் வழங்கிக் கொண்டிருந்த போது வேட்பாளர் ஒருவர் கற்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட வேட்பாளரிடம் ஏற்கனவே 97 ஆயிரத்து 200 ரூபா பணம் இருந்ததுடன், அந்தப் பணத்தை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## கடந்த 24 மணி நேரத்தில் 462 தேர்தல் முறைப்பாடுகள்

கடந்த 24 மணி நேரத்தில் பொதுத் தேர்தல் தொடர்பாக மொத்தம் 462 புதிய முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதனையடுத்து தேர்தல் தொடர்பிலான மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 800ஐ தாண்டியுள்ளது.

2024 செப்ரெம்பர் 26ம் திகதி முதல் இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணையகம் தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகளில், தேசிய தேர்தல் முறைப்பாட்டு மேலாண்மை மையத்துக்கு கிடைத்த ஆயிரத்து 206 முறைப்பாடுகளும், தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மாவட்ட மையங்களுக்கு கிடைத்த 2 ஆயிரத்து 616 முறைப்பாடுகளும் உள்ளடங்குகின்றன.

அனைத்து முறைப்பாடுகளும் சட்ட மீறல்களாகவே வகைப்படுத்தப்பட்டுள்ளன, அவற்றில் 23 வன்முறை சம்பவங்களும் பதிவாகியுள்ளன. (ம-7)

**வடமாகாண மரநடுகை மாதம்**

**கார்த்திகை 01 - 30, 2024**

**“ஒரு மரத்தை நடவு செய்வது பிரபஞ்சத்தின் லயத்துடன் உங்களை இணைத்துக் கொள்வதற்கான எளிதான வழியாகும்.”**

-சத்குரு
(இந்திய ஆன்மீகக் குரு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்பாளர் ஒருவர் அதிரடியாக கைது

(புத்தளம்)

புத்தளம்-கற்பிட்டியில் தேர்தல் விதிமுறைகளை மீறி வாக்காளர்களுக்கு பணம் வழங்கிக் கொண்டிருந்த போது பொதுத் தேர்தல் வேட்பாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கற்பிட்டி அல்மனார் முகாமுக்கு அருகில் வைத்து அவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட வேட்பாளரிடமிருந்து 97,200 ரூபாய் பணம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை பொதுத் தேர்தலில் போட்டியிடும் யாழ். வேட்பாளர் ஒருவர் நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## இராசிபலன்

15.11.2024
ஐப்பசி 29, வெள்ளிக்கிழமை
பூரணை பின்னிரவு 3.44 மணிவரை.
பரணி முன்னிரவு 10.47 மணிவரை

சுபநேரம் 6.07-7.37 மணிவரை
இராகுகாலம் -10.37-12.07 மணிவரை
ஐப்பசிப் பரணி, பூரணை விரதம்

சந்திராஷ்டமம்.
உத்தரம், அத்தம்

வளவன்

**மேஷம்** – திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**கடகம்** – கண்ணியம் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரும், எடுத்த காரியங்களில் தீவிரம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** – தொழில் வளர்ச்சிக்கு மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம்.

**மகரம்** – வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைச் சொல்லலாம், பெற்றோர் நலனில் அக்கறை கூடும்.

**ரிஷபம்** – எதிலும் வேகத்தைக் குறைத்து பொறுமையாகச் செயற்படுவது நல்லது, வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**சிம்மம்** – மறைமுகப் போட்டிகள் அகன்று தொழில் விருத்தி ஏற்படலாம், சாமர்த்தியமாகச் செயற்பட்டு சாதனைபடைக்கும் நாள், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும்.

**விருச்சிகம்** – பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பணத்தேவைகள் திருப்தி தரும் வகையில் அமையும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.

**கும்பம்** – எதற்காகவும் பிடிவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டில் ஆர்வம் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** – பெரிய மனிதர்களின் சந்திப்புகள் மகிழ்ச்சி தரும், எதிர்பார்த்த தனவரவுகள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பம் கூடும் நாள், காரிய நன்மையுண்டு.

**கன்னி** – ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம், பொது நலனில் ஈடுபடும்போது மற்றவர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகலாம்.

**தனுசு** – மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மீனம்** – பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள்.

தெய்வம் உதவ நினைத்தால் அதைத் தடுத்து நிறுத்த முடியாது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3259

### மலரவன்

மழை பெய்யிறப்ப கூட ரெஸ்ட் தர மாட்டுறிங்க...



குடும்பமாடா இது

### காவியா

காலத்திற்கு பேசும் சக்தி கிடையாது தான்...



ஆனால் காலம் அனைத்திற்கும் பதில் சொல்லும்

### தாரகன்

மனைவியிடம் சண்டையிட்டு 450 கிலோ மீற்றர் நடந்தே சென்றுள்ளார் ஆந்திராவில்..



நான்லாம் இவன மாதிரி ஆத்திரப்பட்டு நடக்க ஆரம்பிச்சிருந்தா இந்நேரம் செவ்வாய் கிரகத்திற்கே போயிட்டு வந்திருப்பன்

### மாதுளன்




### பிரணவன்

நல்லவனுக்கும் கெட்டவனுக்கும் இருக்கிற சிறு வித்தியாசம் இது தான்



அடுத்தவன் பேச்சை கேட்டு நடந்தால் நல்லவன்... அவனாக சுயமாக சிந்தித்து நடந்தால் கெட்டவன்...

### மதுமிதா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெலிகொப்டர்...

நெடுந்தீவில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் இருந்து, வாக்குப்பெட்டிகளை கையளிப்பதற்கான ஹெலிகொப்டர் பி.ப 05.25 மணிக்கு வாக்கெண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் தரையிறங்கியது.

நெடுந்தீவிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் வருகை தந்த சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களையும், விமானிகளையும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் மற்றும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் மற்றும் வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ.ஜெ.ஹாலிங்க ஜெயசிங்க ஆகியோர் வரவேற்றனர். (ம-7,33)

## கோப்பாய்...

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் தேர்தல் கடைமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் அராலி வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த சுபாஷ் (வயது-34) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த பகுதியில் தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் மலசலகூடத்திற்கு சென்று பல மணி நேரம் திரும்பாததையடுத்து கதவைத் திறந்து பார்த்தபோது உயிரிழந்த நிலையில் காணப்பட்டார்.

இச்சம்பவத்தால் வாக்களிப்பு நிலையத்தில் காலை சிறிது பரபரப்பு காணப்பட்டது. (ம-7,33)

## விருப்பு வாக்கை...

வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரது கைத்தொலைபேசியை கைப்பற்றியுள்ளதாக நுரைச்சோலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வாக்களிப்பு நிலையத்தின் சிரேஷ்ட நிலைய பொறுப்பதிகாரி செய்த முறைப்பாட்டின் பிரகாரம் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## வன்முறை...

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், எவ்வாறாயினும், சட்டவிரோத தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட மூவர் நேற்று கைது செய்யப்பட்டதாகவும் கைது செய்யப்பட்டவர்கள் நெடுங்கேணி, மன்னார் மற்றும் பயகம பகுதியைச் சேர்ந்த 49, 19 மற்றும் 26 வயதுடையவர்களாவர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இவ்வாறாயினும் எந்தவொரு இடத்திலும் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகவில்லை எனவும் இதனால் தேர்தல் அமைதியாக நடைபெற்றதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## யாழ்.தேர்தல்...

யாழ்.மத்திய கல்லூரிக்கு, வாக்களிப்பு நிலையங்களில் இருந்து, பலத்த பாதுகாப்புடன் வாக்குப் பெட்டிகள் எடுத்து வரப்பட்டு, வாக்கெண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வாக்கெண்ணும் மத்திய நிலையத்தினை சூழவுள்ள பகுதிகளில் பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடி படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், வீதிகளும் மூடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில் 59.65 வீத வாக்குகள் பதிவாகியுள்ளன. கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தில் 62.05 வீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தை உள்ளடக்கிய யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 60.85 வீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

யாழ்ப்பாணத்தில் தேர்தல் வன்முறைகளோ சட்ட மீறல்களோ இடம் பெற்றதாகப் பதிவுகள் இல்லை

அதேநேரம் தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம் எனத் தெரிவித்தார். (ம-7,33)

## 65.5 சதவீத...

பெற்றது.

அந்தவகையில் வன்னி மாவட்டத்தில் 65.5 வீத வாக்குகள் பதிவாகியுள்ளது. வவுனியாவில் 63.75 வாக்குகளும்,

முல்லைத்தீவில் 62.45 வாக்குகளும், மன்னாரில் 70 வீதமான வாக்குகளும் பதிவாகியுள்ளன.

இந்நிலையில் இதுவரை மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் அசம்பாவிதங்கள் எவையும் இன்றி சுமூகமான முறையில் வாக்களிப்பு செயற்பாடுகள் இடம்பெற்று முடிந்துள்ளது.

இதேவேளை வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரியில் வாக்கெண்ணும்பணிகளுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மாலை 4.30 மணியளவில் தபால் மூலமான தபால் வாக்குகள் எண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நள்ளிரவுக்குள் முடிவுகளை அறிவிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ம-7,250)

## அமைதியான...

வழமையைவிட மிகவும் அமைதியாகவும், சுமுகமாகவும் நடந்து முடிந்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சுமுகமான முறையில் தேர்தலை நடத்துவதற்கு ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதாகத் தேர்தல்கள்ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு நேற்றுக் காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல்4.00 மணிக்கு நிறைவடைந்தது. வாக்களிப்பின்போது பாரதூரமான வன்முறைச் சம்பவங்கள் எவையும் பதிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 60...

துள்ளனர்.

இதேவேளை, சில மாவட்டங்களில் அஞ்சல் மூல வாக்குகளை எண்ணும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள்ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாக்குப்பதிவுகள் நேற்றுக்காலை 7 மணிமுதல்மாலை 4 மணி வரை இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 60 சதவீத வாக்குகளும் நுவரெலியா மாவட்டத்தில் 68 சதவீத வாக்குகளும் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 65 சதவீத வாக்குகளும், மொனராகலை மாவட்டத்தில் 63 சதவீத வாக்குகளும், மாத்தறை மாவட்டத்தில் 64 சதவீத வாக்குகளும் மாத்தளை மாவட்டத்தில் 67 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

பதுளை மாவட்டத்தில் 67 சதவீத வாக்குகளும், கேகாலை மாவட்டத்தில் 64 சதவீத வாக்குகளும்,

கொழும்பு மாவட்டத்தில் 65 சதவீதமும், இரத்தினபுரி மாவட்டத்தில் 63 சதவீதமும், குருநாகல் மாவட்டத்தில் 64 சதவீதமும், புத்தளம் மாவட்டத்தில் 56 சதவீதமும், பொலநறுவை மாவட்டத்தில் 65 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

கண்டி மாவட்டத்தில் 62 சதவீத வாக்குகளும், களுத்துறை மாவட்டத்தில் 64 சதவீத வாக்குகளும், கம்பஹா மாவட்டத்தில் 65 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளும் பதிவாகியுள்ளன.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 60 சதவீத வாக்குகளும், திகாமடுல்லை தேர்தல் மாவட்டத்தில் 62 சதவீத வாக்குகளும், காலி மாவட்டத்தில் 64 சதவீத வாக்குகளும், அனுராதபுரம் மாவட்டத்தில் 65 சதவீத வாக்குகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 61 சதவீத வாக்குகளும், திருகோணமலை மாவட்டத்தில் 67 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.11.14
சீட்டிழுப்பு இலக்கம் 5656
T 0 0 7 8 2 6
அத சம்பத
T 7 8 2 6
சீட்டிழுப்பு இலக்கம் 231
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.11.14
சீட்டிழுப்பு இலக்கம் - 1686
Y 21 40 71 73 Y
Double Chance 80846

மெகா பவர்
திகதி 14/11/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2004
A 11 20 62 67 75
Double Chance 049128

லக்கி 7 VIP
திகதி 2024.11.14
சீட்டிழுப்பு இலக்கம் 0482
C 3 7 0 1 1 1 C

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3898
சீட்டிழுப்பு திகதி 14.11.2024
Y 03 48 62 63
Y 021370

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.11.14
சீட்டிழுப்பு இலக்கம் 965
கன்னி 02 27 31 62 கன்னி
187416 34

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிர் தன சவிய
14.11.2024 வெற்றி வாரம் 364
ஆங்கில எழுத்து Z
மற்றும் வெற்றி இலக்கம் 3 7 6 8 5 5
22631
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,579,400.00
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2630
சீட்டிழுப்பு திகதி 2024.11.14 தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 19 22 28 43 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,634,196.80
DLB

சனிதா
திகதி 14.11.2024 வெற்றி வாரம் 4791
வெற்றி இலக்கங்கள் 42 45 59 61 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,304,216.00
ரூ. 100,000/- பணப்பரிசு 70755
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 557
சீட்டிழுப்பு திகதி 14.11.2024
வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 02 13 36
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4342
சீட்டிழுப்பு திகதி 14.11.2024 தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 01 07 30 55
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,477,168.40
100593
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 39 05 24 28 29
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1806
14.11.2024 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.555,419,361.80
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2456
சீட்டிழுப்பு திகதி : 2024.11.14
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.82,364,679.20
அட கோட்டிபதி ADA KOTIPATHI
வெற்றி இலக்கங்கள் 06 18 25 69 T
804176
DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மலர்வு 27 - 08 - 1955

உதிர்வு 13 - 11 - 2024

## சர்வவேஸ்வர லலிதா கமலநாதன்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சர்வேஸ்வர லலிதா கமலநாதன் அவர்கள் 13.11.2024 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை மகேஸ்வரி தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற கமலநாதனின் (உதவிக் கல்விப் பணிப்பாளர்)அன்பு மனைவியும் மற்றும் காலஞ்சென்ற சர்வேஸ்வர ரூபி, சர்வேஸ்வர ஜோய், காலஞ்சென்ற சர்வேஸ்வர செவ்வேள், சர்வேஸ்வர விமோசனம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான சர்வானந்தம், கமலானந்தன், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் மற்றும் சர்மிளா (லண்டன்), சர்மிலன்(லண்டன்), சர்வன் (லண்டன்), தர்மலிங்கம் (சந்திரன்) ஜனேசன் (கனடா ), உமாஜினி ஆகியோரின் அன்புச் சிறியதாயும் வஜனியின் பாசமிகு அத்தையும் லேந்தினி, மோகன் ஆகியோரின் அன்புப் பெரியதாயும் லிங்கேஸ்வரன், வாசுகி, வேணிக்கா, சந்திரா, கயல்விழி, பிரசாந் ஆகியோரின் அன்பு மாமியும் ஷாலினி, கார்த்திகன், கபிலன், கிஷோர், கிஷானி, கிஷாந், அபிஷேகன், இறைவி, ஆதவி, பாவந்திகா, விஹான், ஏகனேகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 15.11.2024 வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம் 12.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

(2433)

தகவல் :
குடும்பத்தினர்

யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்
யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
38,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
மற்றும் அனைத்து நாடுகளுக்குமான ரிக்கற்றுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)
(541)

# வாக்குச் சீட்டை கிழித்தெறிந்த நபர் கைது

வாத்துவ, பொதுப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள வாக்களிப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டைக் கிழித்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் வாத்துவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர் வாக்குச் சீட்டை எடுத்துக் கொண்டு வாக்களிப்பு நிலையத்திற்குள் நுழைந்து விருப்பு எண்களை மறந்துவிட்டதாகக் கூறி வாக்களிப்பு நிலையத்தை விட்டு வெளியேற அங்கிருந்த அதிகாரிகளிடம் அனுமதி கோரினார்.


ஆனால், அதிகாரிகள் அனுமதி வழங்க முடியாது என்று கூறியதால் அவர் வாக்குச் சீட்டை கிழித்து எறிந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

சிறுநீரகம் தேவை
"0" குருதி வகை சிறுநீரகம் அவசரமாக தேவை.
வயதெல்லை 45 (உட்பட்டவர்)
077 540 6732
077 723 8937
(2423)

விசாக்கான (Show money)
வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
குறைந்த சதவீதத்தில்%
•Visit visa
•Student visa
•Fixed & saving
சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு :
075 033 6759
(2415)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1587)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 17.02.1940

மறைவு 17.10.2024

கடந்த 17.10.2024 வியாழக்கிழமை
அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் நாகலிங்கம் ஏகாம்பரநாதன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 16.11.2024 சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து திருநெல்வேலி சிவகாமி மண்டபத்தில் இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எம்மை நல்வழி நடாத்திய எங்கள் குடும்பத் தலைவரின் சிவபதப்பேறு குறித்த தகவல் கிடைத்தவுடன் நேரம் பாராது உடன்வந்து உதவி செய்த மற்றும் மரணச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், அயலவர் மற்றும் நண்பர்கள், மலர் வளையம், அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இல.21/21, கலாசாலை வீதி,
2 ஆம் ஒழுங்கை,
திருநெல்வேலி.

(539)

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.